வியாபாரம் பெருக விளம்பரம் செய்க !

www.nilafrance.com

# நிலா

இருமாத இதழ்
**இலவச வெளியீடு**
(4000 பிரதிகள்)

பங்குனி - சித்திரை 2014 | எமது அச்சகத்தின் ஓர் விளம்பர வெளியீடு | இல. 26




**வளிமண்டலம்** மாசடைவது தொடர்பாக பிரான்ஸ் மட்டுமல்ல உலக நாடுகள் எல்லாமே அச்சம் கொள்ளத் தொடங்கிவிட்டன. அண்மையில் பிரான்ஸ் தலைநகர் பாரிஸ் உட்பட பெருநகரங்களான லியோன், லில், போர்தோ மற்றும் மெற்ஸ் ஆகியவற்றின் காற்று மண்டலங்கள் மாசுபடுதலின் உச்சத்தை எட்டின. நாம் சுவாசிக்கும் காற்றின் தரத்தை அளவிடும் கருவிகளில் சிவப்பு விளக்குகள் ஒளிர்ந்தன. காற்றில் ஏற்பட்டிருக்கும் நச்சுத்தன்மையின் அளவை நூற்றுக்கு தொண்ணூறு எனக்காட்டின. இதமான காலநிலை, சூரியஒளி என எல்லாமிருந்தும் அனுபவிக்க முடியாத நிலைக்கு பிரான்ஸ் மக்கள் தள்ளப்பட்டனர். சூழல் பாதுகாப்பு அமைப்புகள் மற்றும் சுகாதாரத்துறையினர் உடனடி நடவடிக்கைகள் எடுக்கக் கோரியும் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தக் கோரியும் அரசை மேலும் நிர்ப்பந்தித்தன. நகரத்சபை தேர்தல் பிரச்சாரங்களில் மும்முரமாக இருந்த அரசுக்கு இக் காற்று மண்டல மாசு, முக்கிய சவாலாக மூச்சைத் திணறடிக்க துரித நடவடிக்கைகள் சில மேற்கொள்ளப்பட்டன.

வளிமண்டல மாசு என்பது மனித செயற்பாடுகளால் ஏற்படுபவையே. வாகனப்புகை Co2, தொழிற்சாலைகளால் வெளி விடப்படும் நச்சுத்தன்மை வாய்ந்த கார்பன் மொனொக்சைட் புகை போன்றவையே காற்று மண்டல மாசுக்கு முக்கிய காரணிகளாகும். சீனா, டெல்லி, மொங்கோலிய தலைநகரம், மெக்சிக்கோ தலைநகரம், ஈரானின் Alvaz நகரம் போன்றவை உலகளவில் மிகக் கடுமையான காற்று மண்டல மாசுக்குள்ளான பிரதேசங்களாக கணிக்கப்பட்டுள்ளன. இங்கு குறிப்பிட்ட சில நகரங்களில் 'மாஸ்க்' இன்றி சுவாசிப்பதென்பது முடியாத காரியமாகின்றது. காற்று மண்டல நச்சுத்தன்மையால் சீனாவில் வருடத்திற்கு 4 லட்சம் மக்கள் உயிரிழக்கின்றனர். சுவாச நோய்களின் பாதிப்பால் புது டெல்லியில் அதிகதொகையான மக்கள் பலியாகின்றனர். இங்கு உயிரிழப்போரின் எண்ணிக்கை சீனாவை விட அதிகமானதாகும். இவ்வாறாக, செய்தித்தாள்களிலும், தொலைக்காட்சிகளிலும் வெறும் செய்தியாக மட்டுமே அறிந்து வந்த பிரான்ஸ் மக்களுக்கு தொடர்ந்து ஐந்து நாட்களாக பிரான்சில் உச்சத்திலிருந்த காற்று மண்டல மாசுத்தன்மை பெரும் பதட்டத்தை ஏற்படுத்தியுள்ளது.

புகை மூட்டமாக பாரிசின் மேல் இறங்கிய புகை மண்டலத்தில் பொதிந்திருக்கும் மிகவும் நச்சுத் தன்மை வாய்ந்த PM10 துகள்கள் உடல் நலத்துக்கு மிகவும் ஆபத்தானவை. மிகவும் நுண்ணிய இத்துகள்கள் எமது சுவாசத்தோடு எமக்குத்

16ம் பக்கம் பார்க்க

நிலா
தொடர்புகளுக்கு :

சங்கீதா அச்சகம்

39, Bld de la Chapelle - 75010 PARIS (Métro : La Chapelle)
Tél./ Fax: 01. 44. 72. 08. 94 E-mail : sangeethafrance@yahoo.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொழியை பாதுகாக்க
## பிரெஞ்சு கல்விக்கழகம்
### Académie française

**பிரெஞ்சு** கல்விக்கழகம் பிரெஞ்சு மொழியை நெறிப்படுத்துவதற்கும் புதிய சொற்களை அகராதியில் சேர்ப்பதற்கு மாக 17ம் நூற்றாண்டு முதல் இயங்கி வருகின்றது.

அண்மையில் dès que Possible (இயன்றவரை விரைவாக) என்ற சொல்லுக்குப்பதிலாக பிரெஞ்சு மொழி அகராதியில் ASAP என்றசொல்லை உள்ளடக்குமாறு இந்த அமைப்பிடம் விடப்பட்ட கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது. 'அசாப்' என்ற சொல், வங்கிகள், பல் நாட்டு நிறுவனங்களின் மேல்மட்டத்தில் தற்போது பாவனையில் உள்ளது. இச் சொற்பதம் ஆங்கில மயப்படுத்தலின் ஓர் அங்கமே எனக் கூறி கல்விக்கழகம் (Académie) மறுப்புத் தெரிவித்துள்ளது. ASAP என்பது 'As Soon As Possible' என்ற ஆங்கிலப் பதத்தின் முதல் நான்கு எழுத்துக்களைக் கொண்ட சுருக்கமாகும்.

உலக அளவில் பிரெஞ்சு மொழி ஆங்கில மொழிக்கு அடுத்ததாக இரண்டாம் இடத்தில் உள்ளது. சரியான பாதையிலான பிரெஞ்சு மொழியின் வளர்ச்சிக்கும் இருப்புக்குமாக பிரெஞ்சு கல்விக்கழகம் 1635ம் ஆண்டில் எட்டாவது லூயி (Louis VIII) மன்னர் காலகட்டத்தில் அமைக்கப்பட்டது. இக்கால கட்டத்திலிருந்து பிரெஞ்சு மொழி, மக்களை இலகுவாக சென்றடைவதற்காகவும், பிரெஞ்சு மொழியை இலகுபடுத்துவதற்காகவும் விதிமுறைகள் கொண்டு வரப்பட்டன.

இக் கல்விக் கழகத்தின் முடிவுகளை எடுப்பதற்காக பல்வேறு துறைகளில் நிபுணத்துவம் பெற்ற 40 அறிஞர்கள் உள்ளனர். இவர்கள் தெரிவு செய்யப்பட்ட பின்னர் அவர்களின் ஆயுட் காலம் வரை பதவி வகிக்கலாம். இவர்களுள் கவிஞர், நூலாசிரியர், நாடகாசிரியர், சரித்திரவியலாளர், விமர்சகர், விஞ்ஞானிகள் போன்றோர் அடங்குவர். வாக்களிப்பின் மூலம் இவர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர்.

40 பேர் கொண்ட முழுமையான அமைப்பு 14.02.1939ம் ஆண்டிலேயே அமைந்தது. உறுப்பினர்கள் பிரான்சில் இருந்து மாத்திரமே தெரிவு செய்யப்பட வேண்டும் என்ற கொள்கையில் தற்போது தளர்வு செய்யப்பட்டுள்ளது. தற்போது கனடா கியுபெக் மாகாணத்தில் இருந்து உறுப்பின அறிஞர் ஒருவரும் தெரிவாகியுள்ளார்.

பிரெஞ்சுக் கல்விக்கழகம் தனது முதலாவது அகராதியை 1694 இல் வெளியிட்டது.


Alain carpentier

**செயற்கை இதயம்** எதிர்பாராத விதமாக 74 நாட்களுடன் செயற்பட மறுத்ததால் நோயாளி மரணமானார். எதிர்பாராத நிகழ்வால் Carmat நிறுவனமும் பேராசிரியர் Alain carpentier ம் தற்காலிகமாக செயற்கை இதயமாற்றுத்திட்டத்தை ஒத்தி வைத்துள்ளனர். செயற்கை இதயத்தில் ஏற்பட்ட மின்சாரத்தடங்கலே காரணம் எனத் தெரிவித்த பேராசிரியர் தவறுகள் வெகு விரைவில் சீராக்கப்பட்டு மீண்டும் களமிறங்குவோம் எனத் தெரிவித்துள்ளார்.



# 'எனது நண்பர்களே, காப்பாற்றுங்கள்...!'

**1954** பெப்ரவரி 1 ம்நாள் அபே-பியர் விடுத்த அறைகூவல் பிரான்ஸ் முழுவதும் எதிரொலித்தது. வீடற்ற பெண் ஒருவர் பாரிஸ் நகர வீதியொன்றில் குளிர் தாங்கமுடியாது இறந்துகிடந்தார். இதைத் தொடர்ந்து வீட்டு வசதியற்று வாழும் மக்களிற்கு உதவி செய்யும்படி அபே-பியர் அவர்கள் வானொலி மூலம் இவ் உருக்கமான கோரிக்கையை முன் வைத்தார்.

அபே-பியர் கோரிக்கை வைத்து 60ஆண்டுகள் கடந்து விட்டன. அபே-பியரும் தன்னால் முடிந்தளவு போராடிப் பார்த்தார். ஆனாலும் பிரான்சில் வசதிகளற்ற வீடுகளில் வாழ்வோர் தொகை ஒரு கோடியைத் தாண்டி நிற்கிறது.

பிரான்சில் 27 இலட்சம் மக்கள் மிகவும் சிறிய வீடுகளில் அல்லது பாழடைந்த வீடுகளில் வசித்து வருகின்றனர். இவர்களின் வீடுகளில் உள்ள வெப்ப இழப்பு தடுப்புச் சுவர்கள் பலவீனமான நிலையிலேயே உள்ளன.

வீட்டுப் பிரச்சினை உள்ள மக்களுள் 80% ஆனோர் வீடு ஒன்றைத் தேடி எடுப்பது முயற்கொம்பாக உள்ளதாகவே தெரிவிக்கின்றனர். 2000–2013ம் ஆண்டு காலப் பகுதியில் வீடொன்றின் வாடகை 55% இனால் பெருநகரங்களில் அதிகரித்துள்ளது. இன்று ஒருவரின் வருமானத்தில் 25% வீட்டு வாடகைக்கே செலவாகின்றது.

1949ம் ஆண்டில் HLM என்கின்ற சாதாரண வாடகையில் உள்ள நல்ல வதிவிடங்கள் பிரெஞ்சு மக்களிற்காக நிர்மாணிக்கப்பட்டன.

1982ம் ஆண்டில் முதன் முறையாக, வீட்டு உரிமையாளருக்கும் வாடகை குடியிருப்பாளருக்கும் இடையில் ஏற்படுத்தப்படுகின்ற ஒப்பந்தத்தின்படி பலாத்காரமாக குடியிருப்பாளரை வெளியேற்ற, வீட்டு உரிமையாளருக்குக் கட்டுப்பாடுகள் கொண்டுவரப்பட்டன. ●


பிரான்சில் நடைபெற்ற மொபைல் குறும்பட போட்டியில் சதாபிரணவனின் "God is Dead" குறும்படம் அதிக மக்கள் விருப்பு வாக்குளை பெற்று "மக்கள் தெரிவு விருதை" பெற்றுக் கொண்டது. இப்படம் 27,237 விருப்பு வாக்குகளைப் பெற்றுள்ளது. சுமார் 800 குறும்படங்கள் போட்டியில் கலந்து கொண்ட போதிலும் 50 படங்கள் இறுதிப்போட்டிக்கு தெரிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரான்சில் வருடாந்தம் ஒன்றரை இலட்சம் மக்கள் புற்றுநோயினால் இறக்கின்றனர்.



### குழந்தைகளை புற்றுநோயில் இருந்து காப்பதே அரசின் முக்கிய நோக்கம்

– சுகாதார அமைச்சர் –

**பிரான்சில்** புற்றுநோயைக் கட்டுப்படுத்துவதற்காக 1, 50 மில்லியாட் யூரோக்கள் (150 கோடி) செலவில் ஐந்தாண்டு திட்டம் ஒன்று வெளியிடப்பட்டுள்ளதாக பிரான்சின் சுகாதார அமைச்சர் மறிசொல் தூறன் (Marisol Touraine) தெரிவித்துள்ளார். இத்திட்டம் 2014–2019 காலகட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படும்.

புற்றுநோய் உள்ளவர்களுக்கான சிகிச்சையில் பாரபட்சம் நிகழ்வதாகவும் குற்றம் சாட்டப்படுகிறது. பிரான்சில் ஓர் அதிகாரியை விட தொழிலாளி புற்றுநோயால் இறக்க இரண்டு மடங்கு வாய்ப்புகள் உள்ளதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

வங்கிகளும் காப்புறுதி நிறுவனங்களும், புற்றுநோய் மாறிய பின்னரும் இவர்களை நோயாளர்களாகவே கணித்து வருகின்றன. இதன் மூலம் இவர்களின் காப்புறுதிக் கட்டணம் உயர்ந்த நிலையிலேயே உள்ளது. புகைப்பிடிப்பவர்களுள், பிரான்சில் வருடாந்தம் 40, 000 பேர் புற்றுநோயினால் இறக்கின்றனர். இத்தொகை மிகப் பெரிய தொகையாகும். புகைப்பிடிப்பதனால் ஏற்படும் பாதகம் பற்றி கோடைகாலத்தில் இருந்து இளைஞர்கள் மத்தியில் பிரச்சார நடவடிக்கைகள் முன் எடுக்கப்படும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார். 17 வயதில் இருந்து புகைபிடிக்க ஆரம்பிக்கும் இளைஞர்களில் இருவரில் ஒருவர் 60 வயதின் முன்னதாக இறந்துவிட வாய்ப்புண்டு. தற்போது இறக்கும் ஆண்களில் 55% ஆனோர் புற்றுநோயினாலேயே இறக்கின்றனர்.

வருடாந்தம் 350, 000 பேர் புற்றுநோய்க்கு உள்ளாவதாகவும் தெரிய வருகின்றது.



## அனாதரவாய் வீதியில் விடப்பட்ட பள்ளிச் சிறுமி

**பாடசாலை** முடிந்ததும் தனது 6 வயதுச் சிறுமியைச் கூட்டிச் செல்வதற்குச் சென்ற தந்தைக்கு அதிர்ச்சியாய் இருந்தது. சிறுமி பாடசாலைக்கு வெளி வீதியில் கவனிப்பாரற்று அனாதரவாய் நின்றுகொண்டிருந்தாள். ஒன்பது நிமிடங்கள் மட்டுமே தாமதமான தந்தை தனது தாமதத்தை தொலைபேசி மூலம் பாடசாலை நிர்வாகத்திற்கு தெரிவித்துவிட்டே சென்றிருந்தார்.

ஆசிரியர்களின் இந்நடத்தையால் அதிருப்தியடைந்த பெற்றோர் வழக்கு தொடுத்துள்ளனர். நீதிமன்றம் பாடசாலை நிர்வாகத்தை கடுமையாகச் சாடி தீவிர விசாரணை நடாத்தக் கோரியுள்ளது.

நேர தாமதம் சில குறிப்பிட்ட பெற்றோரிடம் வழக்கமாக இருப்பினும் ஒரு குழந்தையை கவனிப்பாரின்றி வீதியில் விடுவதென்பது அனுமதிக்க முடியாதது என மாநகர சபை உதவியதிபர் தெரிவித்துள்ளார். இங்கு பெற்றோருக்கும் ஆசிரியர்களுக்குமிடையிலான பரஸ்பர புரிந்துணர்வு அவசியமாகின்றது. இத்தகைய தவறு மீண்டும் ஏற்படாமல் இருக்க ஆவன செய்ய வேண்டியது கட்டாயம். அத்துடன் ஆசிரியர்களுக்கு உரிமைகள் பல உள்ளன. அதே சமயம் அவர்களுக்கு பல கடமைகளும் உள்ளன எனக் கல்வித்துறை கடும்தொனியில் கருத்து தெரிவித்துள்ளது.

இச்சம்பவம் பிரான்சின் வடக்குப் பகுதியில் அமைந்துள்ள Arras நகரில் இடம்பெற்றுள்ளது.



## ஓடும் வாகனத்தை தொலைவிலிருந்தே நிறுத்த புதிய தொழில்நுட்பம்!

தேவையேற்படின் ஓடும் வாகனம் ஒன்றை தூர இடத்தில் இருந்து நிறுத்துவதற்கான தொழில் நுட்பத்தைக் கண்டறிவதற்காக ஐரோப்பிய பொலிசார் தங்கள் தொழில் நுட்பப் பிரிவை முடுக்கி விட்டுள்ளனர். இத்திட்டம் தற்போதுவரை மிக இரகசியமாகவே வைக்கப்பட்டிருந்தது.

கட்டுப்பாட்டு அறையிலிருந்து பொலிசார் வாகனத்தின் மோட்டரை நிறுத்த முடியும். மோட்டரில் புதிதாக இணைக்கப்படவுள்ள எலெக்ரோனிக் கருவிக்கு கொடுக்கப்படும் சமிக்ஞைமூலம் இது சாத்தியமாகவுள்ளது.

இதன் மூலம் தண்டனையிலிருந்து தப்பியோடியவர்கள், சந்தேக நபர்கள், வேகக்கட்டுப்பாட்டை மீறியவர்கள் போன்றோரைக் கைது செய்வது இலகுவாக இருக்கும்.

மேலும், இத்திட்டம் அமுலுக்கு வந்தால் வீதிகளில் பொலிசார் மேற்கொள்ளநேரிடும் அபாயகரமான வாகனத் துரத்தல்களையும் தவிர்க்க முடியுமென நம்பப்படுகிறது.

ஆனால், பாதுகாப்பு பொலிசாரின் இம்முயற்சி தனிமனித சுதந்திரத்திற்கு பேராபத்தான திட்டமென தனிமனித சுதந்திரசார் அமைப்பான Statewatch தெரிவித்துள்ளது.


பாரிஸ்- 18ல்

'காரை ஸ்வரங்கள்'

தமிழ்ப்பள்ளி

81, Bd Ney - 75018 Paris

ஆசிரியை : செல்வி. சிவராசா


தொடர்புகளுக்கு :

06.62.34.06.89 / 06.16.07.11.57


இதயத்திலிருந்து வரும் மொழி இன்னொரு இதயத்துள் சுலபமாய் உட்புகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கடந்த ஆண்டு பிரான்சில் 97 கோடி சான்ட்விச் விற்பனை!

2013ம் ஆண்டில் பிரான்சில் 97 கோடி (970 மில்லியன்) சான்ட்விச் விற்பனை செய்யப்பட்டுள்ளது. இதில் அரைப்பங்கு சான்விச் பேர்கர்களாக (sandwich Burger) உள்ளன. தற்போது சர்வசாதாரணமாக பிரான்சில் உள்ள நான்கில் மூன்று உணவகங்களின், உணவுப்பட்டியலில் (Menu) பேர்கர் சான்விச் ஒன்றை சேர்க்க வேண்டிய நிலைக்கு பிரெஞ்சு உணவகங்கள் நிர்ப்பந்திக்கப் படுகின்றன.

1997ம் ஆண்டில் தனது கிளைகளை மூடிவிட்டு அமெரிக்கா திரும்பிய பேர்கர் கிங் (Burger King) என்ற அமெரிக்க தொடர் உணவகம் தற்போது பாரிஸ் செயின்–லசார் (Paris Saint-Lazare) பகுதி யில் மீண்டும் 2013 டிசம்பரில் கால் பதித்துள்ளது. 10 ஆண்டுகளுள் 350 அல்லது 400 வரையான உணவகங்களை பிரான்ஸ் முழுவதும் திறக்க முடிவெடுத்து வேலைகளை முடுக்கிவிட்டுள்ளது.

பிரான்சில் சான்ட்விச் பேர்கர்களின் அதீத வளர்ச்சி, பாரம்பரிய உணவகங்களின் வளர்ச்சியில் பங்கம் விளைவிக்கும் என அச்சம் தெரிவிக்கப் படுகின்றது.

**பிரான்சில் மக்டொனால்ட் (Mc Donald's) நிறுவனத்திற்கு 1200 கிளைகளும், குயிக் (Quick) நிறுவனத்திற்கு 370 கிளைகளும் உள்ளன.**



# Les Halles à Rungis

பாரிசின் மிகப்பெரும் சந்தையாக லெ–கால், சித்தே (Les Halles & Cité) சந்தைகளே இணைந்து இயங்கி வந்தன. 1135ம் ஆண்டில் இருந்து இயங்கிவந்த இச்சந்தை, பாரிஸ் நகர் வாழ் 80 இலட்சம் (8 மில்லியன்) மக்களிற்கு நாளாந்தம் 5000 தொன் மரக்கறி, பழ வகைகளை விநியோகம் செய்து வந்தது.

பாரிஸ் நகரின் சுகாதாரத்தையும் சந்தைப் பொருட்களின் இலகு விநியோகத்தையும் கருத்திற் கொண்டு முன்னாள் நாட்டுத் தலைவர் சார்ள்ஸ்–டி–கோல் (Charles de Gaulle) 1960ம் ஆண்டில் சந்தையை இடமாற்றம் செய்ய வேண்டும் என்ற முடிவிற்கு வந்தார். அதன் பிரகாரம் தெற்கு பாரிசில் இருந்து 12 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள றான்ஜிஸ் (Rungis) என்ற இடத்திற்கு சந்தையை இடமாற்றம் செய்ய வேலைகள் முடுக்கிவிடப்பட்டன.

27 பெப்ரவரி 1969 அன்று சந்தைப் பொருட்களை இடமாற்றம் செய்வதற்கான இறுதிநாளாக பிரகடனம் செய்யப்பட்டது. இந் நிகழ்வு இந்த நூற்றாண்டின் பெரியதொரு இடப்பெயர்வு நிகழ்வாக ஐரோப்பாவில் பார்க்கப்பட்டது.

20 000 மக்கள், 1 000 வர்த்தக நிறுவனங்கள், 10 000 கன மீற்றர் கட்டுமான பொருட்கள், 5 000 தொன் சந்தைப் பொருட்கள் என்பன 1 500 வாகனங்களில் அணிவகுத்து றான்ஜிஸ் (Rungis) நகரை நோக்கி நகர்ந்தது. இந்த மா பெரும் இடமாற்றத்திற்கு இராணுவமும் பாதுகாப்பு வழங்கியிருந்தது.



## பாரிஸ் வீதிக் கட்டட இலக்கங்கள்

பாரிஸ் வீதிகளில் கட்டடங்களிற்கு இலக்கமிடும் முறை கொண்டு வரப்பட்டு தற்போது 286 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன.

பாரிசில் 28செப்டெம்பர்1728 இல் முதன் முதலாக Bords de la Bièvre என்ற வீதியில் இலக்கமிடல் ஆரம்பிக்கப்பட்டது. இது பாரிஸ்–13 இல் Rue des Gobelins இற்கு அண்மையில் அமைந்திருந்தது. அந்த காலப் பகுதியில் இலக்கங்கள் ஒற்றை எண்ணும் இரட்டை எண்ணும் ஒரே பக்கத்திலேயே தொடர்ந்த வண்ணம் இருந்துள்ளன.

பின்னர் 4 பெப்ரவரி 1805 இல் ஒற்றை எண்கள் ஒரு பக்கமாகவும் இரட்டை எண்கள் மறு பக்கமாகவும் இருக்கும் முறை சட்டம் மூலம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

பாரிஸ் நகரை ஊடறுக்கும் சென் நதி (Seine) கிழக்கில் இருந்து மேற்கு நோக்கிச் செல்கின்றது. நதிக்கு செங்குத்தாக செல்கின்ற வீதிகளில் முதலாவது இலக்கம் ஆற்றுக்கு அண்மையிலேயே ஆரம்பிக்கின்றது. ஆற்றுக்குச் சமாந்திரமாக செல்கின்ற வீதிகளில் எண்கள், ஆறு ஓடிச் செல்லும் பக்கமாக கூடிச்செல்கின்றன.

### மார்ச் 8

1977 மார்ச் 8 ஐ ஐக்கிய நாடுகள் சபை சர்வதேச பெண்கள் தினமாகப் பிரகடனம் செய்தது.

37 ஆண்டுகள் கடந்த நிலையிலும், பிரான்சில் ஆண்களை விட முக்கால்வாசிப் பெண்கள் குறைந்த சம்பளத்தையே பெறுவதாகவும், அரசியல் மற்றும் ஏனைய துறைகளிலும் சமவாய்ப்புகள் இல்லை என்றும் அறிக்கைகள் சுட்டுகின்றன.

பிரான்ஸ் பாராளுமன்றத்தில் பெண்களின் பங்கு கால் பங்காகவும், செனட் சபையில் 22% ஆகவுமே உள்ளனர்.

1944ம் ஆண்டே பிரான்சில் பெண்களிற்கான வாக்குரிமை வழங்கப்பட்டது. இலங்கையில் 1931ம் ஆண்டில் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்

ஸ்ரீ பத்திரகாளி இசைக்குழுவினர்

இணைந்து வழங்கும்

# இசை நாதம்

## T.M. சௌந்தரராஜன் & P.B. ஸ்ரீனிவாஸ்

ஆகிய இன்னிசைச் சக்கரவர்த்திகளின் இனிய நினைவுகளுடன் சங்கமமாகும்
பிரான்ஸ்வாழ் தமிழ் இசைக்கலைஞர்கள் ஒரே மேடையில் சங்கமமாகி
இன்னிசை வழங்கிச் சிறப்பிக்கும் இவ்வாண்டின் இனிய நிகழ்வு




அன்றைய தினம்
S.P.B, உன்னி கிருஷ்ணன்,
T.L.மஹாராஜன், T.M.S.செல்வகுமார்
ராகுல், ஜெயஸ்ரீ ஆகிய தமிழகத்து
முன்னணி இசைக்கலைஞர்களின்
இணைவில் உருவான
பக்திப் பாமாலைகள்
ஸ்ரீ பத்திரகாளி அம்பாள்
இசைத்தட்டு 1
இறுவெட்டு வெளியீடு

காலம்

**31.05.2014**

சனிக்கிழமை பகல் 12.00 மணி

கலைஞர்கள் கௌரவிப்பு



திரு. யூலியன் பேர்ட்டி



திரு. மயிலையூர் இந்திரன்



திரு. குருநாதன்



- வரவேற்பு நடனம்
- காளியம்மா நவரச நடனம்
- பாரிஸ் முன்னணிக் கலைஞர்கள்
- TMS செல்வக்குமாருடன் இணைந்து வழங்கும் இசை நாதம்

மேலதிக விபரங்களுக்கு: 01 40 37 30 61 அல்லது 06 17 57 98 30

இடம் : 50, Place du Torcy, 75018 Paris (Métro: Marx Dormoy)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோபால் அன் கோ

# GOPAL & CO




## மலிவு விற்பனை

| | |
|---|---|
| தேங்காய்ப்பால் பவுடர் (1kg) 1pks ~~8.90€~~ | 6.90 |
| 5 நெஸ்ரமோல்ட் | 9.90 |
| 6 ரின்மீன் | 9.90 |
| மரவள்ளிக்கிழங்கு 1Kg | 1.49 |
| வாழைக்காய் 1K | 1.00 |
| மைசூர் பருப்பு 1K | 1.39 |
| மைசூர் பருப்பு 5K | 5.99 |

**இலங்கை, இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மரக்கறிகள் அனைத்தும் மலிவு விலையில்.....**

**வாடிக்கையாளர் வசதி கருதி ....**

**லாச்சப்பலில்...**
72, Rue Louis Blanc,
75010 Paris.
M°: La Chapelle

**பொபினியில்...**
205, AV. JEAN JAURES,
93000 BOBIGNY.
Tram 1: La Ferme

**ஸ்ரெலிங்கிராட்டில்..**
84, Rue de l'Aqueduc
75010 Paris.
M° Stalingrad

ortel mobile / Lyca mobile
Lyca SIM
Ortel SIM
~~9.00~~ - 5.00€

**Tél : 01 46 07 11 10 / Fax : 01 46 07 13 03**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தேர்தல் முறைகேடு : செல்வந்தர் கைது

பிரான்சின் நான்காவது செல்வந்தரான சேர்ஜ் டசோ (Serge Dassault) தேர்தலில் போட்டியிட்டு 2008 இல் கோர்பெய் எசோன் (Corbeil-Essonnes) நகர சபை முதல்வரானார். ஆனாலும் இவரால் அதிக காலம் முதல்வராக பணியாற்ற முடியவில்லை.


தேர்தலில் வெல்வதற்காக இரண்டு தவறான வழிவகைகளைக் கையாண்டார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டார். தேர்தல் முறைகேடுகள் காரணமாக 2008ம் ஆண்டிலேயே நகரசபை முதல்வர் பதவியில் இருந்து வெளியேற வேண்டிய நிலைமை ஏற்பட்டிருந்தது.

19 பெப்பிரவரி 2014 இல் விசாரணைக்காக பொலிசாரால் கைது செய்யப் பட்டிருந்தார். இவருடைய நகரசபையில் உள்ளவர்களின் வாக்குகளைப் பெறுவதற்காக முறைகேடான முறையில் தொடர்மாடி குடியிருப்புவீடுகளை வாக்காளர்களுக்கு வழங்கியமை, லெபனான் நாட்டு வாக்காளரின் உறவினர்களுக்கு 18 மில்லியன் யூரோ (180 இலட்சம்) வழங்கப்பட்டமை என இரண்டு திட்டமிட்ட வேலைகளும் வாக்குகளை வாங்குவதற்காகவே செய்யப்பட்டுள்ளதாக பொலிசார் சந்தேகிக்கின்றனர்.

சேர்ஜ் டசோ (Serge Dassault) ஓர் பிரபல்யம் மிக்க தொழிற்துறை நிபுணருமாவார். போர்விமானங்களையும் இராணுவ தளபாடங்களையும் தயாரிக்கும் நிறுவனம் மற்றும் லு பிகாறோ (Le Figaro) நாளிதழின் உரிமையாளருமாவார். UMP கட்சி முன்னாள்ஜனாதிபதி நிக்கோலா சார்க்கோசியின் ஆட்சிக்காலத்தில் ஆயுத உற்பத்தி விற்பனை பல்கிப் பெருகி இருந்தது குறிப்பிடத்தக்கது.

அத்துடன் 1998ம் ஆண்டில் பெல்ஜியத்திற்கான இராணுவ ஹெலிகொப்ரர் ஒப்பந்தம் ஒன்றைப் பெறுவதற்கு இலஞ்சம் கொடுத்த வழக்கில் இரண்டு வருட ஒத்திவைக்கப்பட்ட தண்டனையும் பெற்றிருந்தார்.

உலகின் 69வது செல்வந்தராக 13 பில்லியன் யூரோக்கள் (1300 கோடி) சொத்துக்களைக் கொண்டிருக்கும் 88 வயது நிரம்பிய இவர், தொடர் பொலிஸ் விசாரணைக்கும் தண்டனைக்கும் உள்ளாக வேண்டிய நிலையில் உள்ளார்.




பிரான்சில் தற்போது 101 மாவட்டங்கள் உள்ளன. இவற்றில் மயொத் என்கின்ற மாவட்டமே இறுதியில் அமைந்த மாவட்டமாகும். இது 2011 இல் அமைக்கப்பட்டது.

தற்போது இதன் மக்கள் தொகை 212,645 ஆக உள்ளது. இவர்களுள் பதினேழுமுறை வயதிற்குக் குறைந்தவர்கள் 50% ஆக உள்ளனர். இந்த மாவட்டமே பிரான்சின் அதிகூடிய இளைஞர்களைக் கொண்ட மாவட்டமாக விளங்குகின்றது.

ஆனால் இங்கு 210,000 பேர் எந்த டிப்ளோமா (Diplôme) சான்றிதழும் இல்லாதவர்களாக உள்ளனர். இது இம் மாவட்டத்தின் 71% ஆகும். அத்துடன் மூன்றில் ஒரு பங்கினர் ஒருபோதும் பாடசாலை செல்லாதவராக உள்ளனர். இக் காரணிகளால் இங்கு வேலையற்றோர் தொகை 36% ஆக உள்ளது.




## பாடசாலைகளுக்கு அருகில் Mc Donald உணவகங்களுக்குத் தடை!

**சிறார்களுக்கு** Mc Donald உணவுகள் மீது அலாதிபிரியம்தான். ஆனால் மருத்துவர்கள் மற்றும் உணவுத்துறை ஆய்வாளர்களுக்கோ Mc Donald உணவுகள் சமநிலையற்ற, உடல் நலத்திற்கு கேடு விளைவிப்பவை. உடல் எடை அதிகரிப்பிற்கு இவ்வுணவுப் பழக்கவழக்கங்களும் முக்கிய காரணிகளாகும். இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு பாரிசில் உணவுப் பழக்கவழக்கங்களை சரியாகப் பேணுவதற்கான அமைப்புகள், பாட சாலைகளுக்கு அருகாமையில் Mc Donald துரித உணவகங்கள் ஆரம்பிப்பதற்குத் தடைவிதிக்கக் கோரியுள்ளன. இக்கோரிக்கை பாரிஸ் 2 நகர சபையில் முன்வைக்கப்பட்டுள்ளது. இவ்வாறான ஒரு கோரிக்கை 2013ல் Sentier - Montorgueil பகுதியில் முன்வைக்கப்பட்டு வெற்றியீட்டியிருந்ததும் குறிப்பிடத்தக்கது. இதுவரை பாடசாலைகளுக்கு அருகில் Sex Shop களுக்கு மட்டுமே தடை அமுலில் இருந்தது. இப்போது இவ்வகை துரித உணவகங்களுக்கும் தடைகோரப்படுகின்றது.



## பிரான்சின் 51வது விவசாயக்கண்காட்சி

**பிரான்சின்** மிகப்பிரசித்தி பெற்ற இக்கண்காட்சி வருடா வருடம் பிரான்சின் விவசாய மேம்பாட்டை பறைசாற்றி வருகிறது. இம்முறை 703, 407 வருகையாளர்களைப் பதிவு செய்து சாதனை புரிந்துள்ளது. இது 2013ம் ஆண்டிலும் பார்க்க அதிகமான வருகையாகும். அதிபர் François Hollande ஆல் ஆரம்பித்து வைக்கப்பட்ட கண்காட்சியில் 4000 இற்கும் அதிகமான கால்நடைகள் காட்சிக்கு வந்தன. அதிக மக்களின் வருகைக்கு குளிர் குறைவான, இதமான காலநிலையும் ஒரு காரணியாகும். இவ்வாண்டு கண்காட்சியில் விவசாயத்திற்கு தேவையான புதிய தொழில் நுட்ப உபகரணங்கள் முன்னிலை வகித்தன. அதிக மக்களின் வருகை என்பது பிரான்ஸ் மக்களுக்கும் விவசாயத்திற்குமான பந்தத்தின் பரிமாணத்தை நமக்கு வெளிச்சமிட்டுக் காட்டியுள்ளது எனத் தெரிவித்த அமைப்பாளர்கள், பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட அதிபரின் உரையில் அவர் அளித்துள்ள வாக்குறுதிகள் எமக்கு ஆறுதலாக உள்ளன எனத் தெரிவித்தனர். இருப்பினும் எவ்வாறு அவை அரசால் கடைப்பிடிக்கப்படவுள்ளன என்பது தான் கேள்வியாக உள்ளது எனவும் மேலும் தமது ஆதங்கத்தை வெளிப்படுத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இயற்கை வேளாண்மைக்கான பொற்காலம்

Bio இயற்கை உணவு உற்பத்தி தற்போது பிரான்ஸ் விவசாயிகளைக் கவர்ந்து இழுக்கின்றது. இயற்கை வேளாண்மைக்கான விவசாய நிலங்கள் கடந்த ஆறு வருடங்களில் இரண்டு மடங்காக பிரான்சில் பெருகியுள்ளது.

2007ம் ஆண்டில் 0.8% ஆக இருந்த இயற்கை வேளாண்மை விவசாய பரப்பளவு 2013ம் ஆண்டில் 2% ஆக அதிகரித்துள்ளது. பிரான்சில் தற்போது 8316 ஹெக்டர்களில் இயற்கை உணவுவகைகள் பயிரிடப்படுகின்றன. இவை பிரான்சில் தற்போது 186 பெருந் தோட்டங்களாக உள்ளன.

பிரான்சின் இயற்கை உணவு உற்பத்தியில் அரைப்பங்கு சலாட், கோவா, கரட் போன்றவையாக உள்ளன. இயற்கை உணவு உற்பத்தியாளர்களில் முக்கால் பங்கினர், தங்கள் உற்பத்திப் பொருட்களை நேரடியாக வாடிக்கை யாளர்களிற்கு விற்பனையும் செய்கின்றனர்.

பிரான்சில் இயற்கை உணவு விளையும் பகுதிகள் சுவையான தண்ணீர் வசதியைக் கொண்டுள்ளன. தற்போது இயற்கை உணவிற்கான தேவை மிகவும் அதிகரித்து வருகின்றது. இந் நிலையில் பிரான்சில் 578,000 ஹெக்டர் பரப்பளவில் Bio உணவு 2015 இல் உற்பத்தி செய்ய திட்டமிடல் வேலைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

2012ம் ஆண்டில் 400 கோடி யூரோ பெறுமதியான இயற்கை உணவு உற்பத்திவகைகள் விற்பனையாகியுள்ளன. எதிர்காலத்தில் ஒரு மில்லியன் (10 இலட்சம்) ஹெக்டர் பரப்பளவில் பிரான்சில் Bio விவசாயம் இடம் பெறும். இதற்கான காலவரையறை 2017ம் ஆண்டாக உள்ளது.

---

Proof

நம்மைத் தெரிந்தவர்களுக்கு
நாம் எதையும் நிரூபிக்கத் தேவையில்லை
நம்மைத் தெரியாதவர்களுக்கும் தான்!

---



**யோகர் சுவாமிகளின்**
**50வது பொன்விழா நிகழ்வுகள்**
இடம் : லாக்கூர்னேவ் - சிவன்கோயில்
**காலம் : 08.05.2014**


---


## மெத்ரோ

**மெத்ரோ சேவை** 1900 ஆம் ஆண்டு ஆரம்பித்தது முதல் இன்று வரை பல வளர்ச்சிகளை கண்டுள்ளது. இதில் மெத்ரோ வண்டிகளும் காலத்திற்கு காலம் மாற்றம் பெற்றுள்ளன.

தற்போது பாரிசில் எட்டு வெவ்வேறு வகையான வண்டிகள் பாவனையில் உள்ளன. இதில் நான்கு வகை ரயர்களில் ஓடுபவையாகும். ஒவ்வொரு வண்டிக்கும் ஒவ்வொரு பெயர் உண்டு. MP (Matériel sur Pneumatiques) டயரில் ஓடுபவை. மற்றையவை MF (Matériel sur Fer) இரும்புச் சக்கரங்களில் ஓடுபவை. 1949ல் RATP ன் உருவாக்கத்தின் பின்னர் MP, MF ற்கு பின்னர் இலக்கங்களும் கொடுக்கப்பட்டன.

அவ் இலக்கங்கள் எந்த ஆண்டில் அவ்வண்டிகள் சேவைக்குட்படுத்தப்பட்டன என்பதைக் குறிக்கும் உதாரணமாக 'MP 89' மெத்ரோ இலக்கம் 4, 89ம்ஆண்டில் சேவைக் குட்படுத்தப்பட்ட வண்டிகளாகும். முதலாவது மெத்ரோவாக Sprague Thomson வண்டிகளும் இறுதி வரவாக MP 05 வண்டிகளும் சேவைக்குட்படுத்தப்பட்டுள்ளன.


MP 05


MP 89


MF 01


MF 77

## Stalingrad

**தற்போதைய** மெத்ரோ தரிப்பிடமான Stalingrad 1946 வரை Aubervilliers - Boulevard de la Villette என்றே அழைக்கப்பட்டது. 1946 பெப்ரவரி 10 முதலே Stalingrad எனப் பெயர் மாற்றம் கொண்டது. இரண்டாம் உலகப்போரில் அமெரிக்கா, சோவியத் யூனியன் மற்றும் இங்கிலாந்து ஆகியன பிரான்சின் நட்பு நாடுகளாக செயற்பட்டன. சோவியத் யூனியனின் Stalingrad நகரில் நாசிப்படைகளுக்கெதிரான கடும் யுத்தத்தில் நாசிப்படைகள் தோற்கடிக்கப்பட்டன. இத் தோல்வியை கிட்லரின் பெருந் தோல்வியாக வரலாறு பதிந்து கொண்டது. இவ்வெற்றிக்கு பல்லாயிரக்கணக்கான சோவியத் வீரர்களின் உயிர்கள் பலி கொடுக்கப்பட்டன. அவ்வீரர்களின் நினைவாக இம் மெத்ரோ நிலையம் Stalingrad என பெயர் மாற்றம் பெற்றது.

ரஸ்யாவில் மாற்றம்பெற்ற அரசியல் காரணிகளால் Stalingrad நகரம் தற்போது Volgograd என மாற்றப் பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உணர்வு பூர்வமாக விடைபெற்ற பாரிஸ் நகரபிதா Bertrand Delanoë

**பாரிஸ்** நகர சபையின் சோசலிசக் கட்சி உறுப்பினர் பேர்த்தரண்ட் தெலநூஆ (Bertrand Delanoë) தனது மாநகர சபைக் கூட்டத்தின் இறுதி உரையை 10.02.2014 இல் உணர்வு பூர்வமாக நிகழ்த்தினார். இவர் 2001–2014 காலப்பகுதியில் இரண்டு முறை பாரிஸ் மாநகர சபைத் தேர்தலில் வெற்றி பெற்று 13 ஆண்டுகள் நகர பிதாவாகப் பணியாற்றியுள்ளார்.

நெஞ்சை வருடும் ஏதும் பழைய நினைவுகளோ, மனந்தாங்கல்களோ ஏதுமில்லாது மிகுந்த மன நிறைவு–டனேயே தனது 13 ஆண்டு கால பாரிஸ் மாநகர சபைத் தலைவர் பதவியை நிறைவு செய்வதாக தனது உரையில் உணர்வு பூர்வமாக குறிப்பிட்டார்.

இறுதி உரையின் பின்னர் ஆளுங்கட்சியைச் சார்ந்தவர்கள் மாத்திரமல்லாமல் எதிர்கட்சியினரும் இணைந்து கரகோசம் செய்து தங்கள் ஆதரவைத் தெரிவித்தனர்.

இவருடைய காலத்திலேயே வெலிப் (Velib) என்று புகழ்பெற்ற இரு சக்கர, (autolib) நான்கு சக்கர வண்டிகள் வாடகைக்கு விடப்படுகின்ற பாரிய திட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது.

70,000 புதிய வதிவிடங்கள் குறைந்த சம்பளம் பெறுவோருக்காக நிர்மாணிக்கப்பட்டன. சூழல் மாசடைவதை தவிர்க்கும் நோக்கில், பாரிசில் 85,000 வாகனத்தரிப்பிடங்கள் குறைக்கப்பட்டு மரங்கள் நாட்டப்பட்டன. அத்துடன் செயின் நதியோரத்தில் கோடைகால செயற்கைக் கடற்கரையும் நிர்மாணிக்கப்பட்டது.

பாரிஸ் நகரசபை உறுப்பினராக 1977, 1983, 1989, 1995, 2001, 2008 வருடங்களில் நடைபெற்ற தேர்தல்களில் உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

1998 இல் பிரான்ஸ் தொலைக்காட்சி ஒன்றின் நேர்காணலின் போது, தான் ஓர்பால் உறவாளன் என்பதை பகிரங்கமாக அறிவித்திருந்த முதலாவது நகரபிதா இவர்.

5 அக்டோபர் 2002 இல், இவர் ஓர்பால் உறவாளர் என்பதற்காக பாரிசில் கத்திக்குத்துக்கு இலக்கானார். இவரை கத்தியால் குத்தியவர் சித்த சுவாதினமானவர் என்று வழக்கில் இருந்து விடுதலை செய்யப்பட்டார்.

துனிசியாவில் (Tunisie) பிறந்த இவர் பிரான்ஸ் வந்த பின்னர் 1981–1986 காலப் பகுதியில் நாடாளுமன்ற உறுப்பினராகவும் இருந்துள்ளார். 1995–2001 காலப்பகுதியில் செனட்டராகப் பதவி வகித்த இவர், இராஜினாமா செய்து விட்டு பாரிஸ் நகரசபைத் தலைவராக பதவி ஏற்றிருந்தார். ❍


கொக்கட்டிச்சோலையில் ஓர் அறிவாலயம்
www.ariivalayam.com
0094 65 56 83 545




## பாதுகாப்பு மற்றும் சுத்தம் இல்லாத பகுதியாக Gare du Nord - Gare de L'est

பாரிசின் Gare du Nord , Gare de l'Est பகுதி மக்கள் சங்கமங்கள் வாழும் பகுதி பாதுகாப்பின்மையாகவும் அசுத்தம் நிறைந்த பகுதியாகவும் உள்ளது என கவலை தெரிவிக்கின்றது.

கார்–து–நோத் (Gare du Nord) தொடரூந்து நிலையம் ஐரோப்பாவின் அதிக மக்கள் பயணிக்கும் புகையிரத நிலையமாகும். இந்த நிலையத்தில் நாளாந்தம் சராசரியாக 5 இலட்சம் மக்கள் பயணிக்கின்றனர்.

இங்கு மூன்று மெத்ரோ (2–4–5) தடங்களும் மூன்று RER (C-D-E) தடங்களும் இலண்டன், பெல்ஜியம் உட்பட வெவ்வேறுநாடுகளுக்குப் பயணிக்கும் 2600 தொடரூந்துகளும் நாளாந்தம் இயங்குகின்றன.

இவ்வளவு பிரபல்யம் மிக்க பாரிசின் இப் பகுதியில் சர்ச்சைக்குரிய போதைப் பொருள் நுகரும் மையம் ஒன்று அமைவது பொது மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தினாலும் அது குறைந்தளவான ஆபத்தையே ஏற்படுத்தும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சித் தேர்தலை முன்னிட்டு அனைத்து அரசியல் கட்சிகளினதும் மேலதிக கவனம் இப்பகுதி மீது குவிந்துள்ளது. அனைத்துக் கட்சிகளும் இப்பகுதியை சுறுசுறுப்பு மிக்க சக்தி வாய்ந்த பகுதியாக மாற்ற முனைகின்றனர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரான்ஸ் தமிழர் நிகழ்வுகள்

- **காரை ஸ்வரங்கள்**

காரை நலன்புரிச்சங்கம் - பிரான்ஸ் கிளையின் காரை ஸ்வரங்கள் 16.02.2014 பி.பகல் 2 மணிக்கு Pte de Bagnolet ல் நடைபெற்றது.

- **மகாஜனா ஒன்றுகூடல்**

மகாஜனா ப.மா.சங்கத்தின் குடும்பஒன்றுகூடல் 16.02.2014 அன்று Bobigny யில் நடைபெற்றது.

- **இயக்குனர் பாலுமகேந்திரா**

இயக்குனர் பாலுமகேந்திரா அவர்களின் நினைவஞ்சலி நிகழ்வு 16.02.2014 அன்று பாரிசில் ஈழத்தமிழர் திரைப்படச்சங்கத்தினால் நடாத்தப்பட்டது.

- **வன்னி மயில்**

பிரான்ஸ் தமிழ் பெண்கள் அமைப்பினால் நடாத்தப்பட்ட வன்னிமயில் நாட்டிய நிகழ்வு 23.02.2014 செவ்ரோனில் நடைபெற்றது.

- **ஏழாலை - மணிஓசை**

ஏழாலை ஒப்புரவு நற்பணிக் கூடத்தின் மணி ஓசை நிகழ்வு 09.03.2014 Marx Dormoy மண்டபத்தில் நடைபெற்றது.

- **தாமோதரகானம்**

சாவகச்சேரி இந்துக்கல்லூரி ப.மா.சங்கத்தின் தாமோதரகானம் இசை நிகழ்ச்சி 15.03.2014ல் பாரிசில் நடைபெற்றது.

- **சென். பற்றிக்ஸ்**

யாழ் புனித பத்திரிசியார் கல்லூரி பழைய மாணவர் சங்க பிரான்ஸ் கிளையின் 25வது வருட வெள்ளி விழா 16.03.2014 அன்று ஒபேவில்லியயேயில் நடைபெற்றது.

- **சதுரங்கப்போட்டி**

அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழகம் நடாத்திய சதுரங்கப்போட்டி 23.03.2014 அன்று Drancy யில் நடைபெற்றது.

- **இறுவட்டு வெளியீடு**

ஸ்ராார் ஸ்ரீ யின் நகைச்சுவைப்பாடல்கள் இசைத்தட்டு வெளியீடு 23.03.2014 அன்று பாரிசில் நடைபெற்றது.


**சங்கீதா அச்சகம்**
01.44.72.08.94



நெற்கொழுதாசனின்
**ரகசியத்தின் நாக்குகள்**
**நூல் வெளியீடு**
**06.04.2014**
5, Rue Pierre l'Ermite
75018 Paris
M°: La Chapelle


# ஏர்ப்பு விசையால் ஏர்க்கப்பட்ட OSCAR



அமெரிக்காவின் அதியுயர் திரைத்துறை விருதான ஒஸ்கார் விருது வழங்கும் நிகழ்வு மார்ச் 2ல் நடைபெற்றது. இந் நிகழ்வு, உலகிலேயே அதிகளவில் தொலைக்காட்சி மூலம் பார்வையிடப்படும் விருது வழங்கும் விழாவாகும். லாஸ் ஏஞ்சல் நகரில் நடைபெற்ற 86வது இவ்விழாவில் சிறந்த திரைப்படமாக **12 years A Slave** (பன்னிரண்டு ஆண்டுகள் அடிமையாக) திரைப்படம் விருது பெற்றது. 1850 ல் அமெரிக்காவில் வாழ்ந்த கறுப்பினத்தவரான Solomon Northup ன் வாழ்க்கையை மையமாகக் கொண்டது. இவர் ஒரு விவசாயி மற்றும் வயலின் இசைக்கலைஞர். அக்காலகட்டத்தில் கோரமாக நிலவிய மனிதரை அடிமைகளாக விற்கும் வியாபாரிகளின் சூழ்ச்சிக்குள் வீழ்த்தப்பட்டு அடிமையாக விற்கப்பட்டார். பின்னர் என்ன நடந்தது? விடுதலையடைந்தாரா என்பது உருக்கமான மீதிக்கதை. சிறந்த துணை நடிகை, சிறந்த உண்மைக்கதையின் தழுவல் (Addaptation) என 3 ஒஸ்கார் விருதுகளை வென்றுள்ளது.




இத்திரைப்படம் தவிர எந்தவித ஏமாற்றங்களுமில்லாமல் **Gravity** (ஈர்ப்பு விசை) திரைப்படம் 7 ஒஸ்கார் விருதுகளைத் தட்டிச்சென்றுள்ளது. சிறந்த இயக்குனர், ஒளிஓவியம், ஒலி வடிவமைப்பு, ஒலித்தொகுப்பு, இசை, படத்தொகுப்பு, ஸ்பெசல் எபெக்ட் (Effets Spéciaux) என அனைத்து விருதுகளும் அவர்கள் கையில். விண்வெளியில் தங்கியிருந்து ஆராய்ச்சி மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளும் விண்வெளி வீரர்கள் எதிர்பாராத விதமாக விண்வெளிக் கழிவுகள் என அழைக்கப்படும் விண்வெளியில் அலைந்து கொண்டிருக்கும் இரும்புக் கழிவுகளால் விபத்துக்குள்ளாகின்றனர். அவர்களது விண்வெளி நிலையம் சேதமடைந்து அனைவரும் இறந்துவிட விஞ்ஞானியான ஒரு பெண் மட்டும் (Sandra Bullock) உயிர்தப்பி விடுகிறார். அவர் மீண்டும் புவியீர்ப்பை அடைந்தாரா? என்பது திகிலான மீதித் திரைப்படம். 3D தொழில் நுட்பத்தில் வெளியான இத்திரைப்படம் விருதுகளை மட்டுமல்லாது வசூலையும் அள்ளியுள்ளது.


**நாடகவெளி**
நாடகம் :
உரையாடலும் உருவாக்கமும்

நாடகம் தொடர்பான
தேடலும், ஆர்வமும்
உள்ளோர்
தொடர்பு கொள்ளவும்!

தொடர்புகளுக்கு :
06.60.23.44.06
06.18.19.18.50
06.68.81.63.62
06.69.43.77.23





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Mjm Since 1987

• Gold • Diamond • Platinum

# அட்ஷய திருதிகை

**01.05.2014**
வியாழக்கிழமை

**02.05.2014**
வெள்ளிக்கிழமை

“அட்ஷயம்” என்றால் வளர்வது என்று பொருள்
“அட்ஷய திருதிகை” என்றால் வளர்ச்சியை
ஏற்படுத்தும் தினம் என்பது அர்த்தம்

## இது தங்கம் வாங்கும் தினம்







## மோகன் ஜுவலரி மார்ட்

201, Rue du Fg. St. Denis - 75010 Paris (M°: La Chapelle / Gare du Nord)
Tél.: 01 42 05 65 26 - Fax : 09 50 31 01 82
E-mail : mohanjm@hotmail.fr : mohanjewellerymart


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

விஞ்ஞானம் பரிந்துரை செய்துள்ள உணவு வகைகளும் அவற்றால் கிடைக்கக் கூடிய நலன்களும்.

# சீரான உணவு முறை என்பது என்ன?



**"நான் இன்று 80 சதவீதம் தான் உணவருந்தினேன்"** என்பது ஜப்பானியச் சொல்வழக்கு. அதாவது பசி வேட்கை முற்றாகத் தீராத நிலையில் உணவை முடித்துக்கொள்கிறார்கள். பசி என்று தொடர்ந்து சாப்பிட்டால் நிச்சயமாக தேவைக்கதிகமான உணவை உட்கொள்ள நேரிடும் என்பது அவர்கள் கருத்து. அதற்காக உணவை ஒறுப்பதல்ல. மாறாக சாப்பிட்ட உணவின் அளவை உடல், மூளைக்கு அனுப்புவதற்கான நேரத்தை ஒதுக்குதலாகும். மனிதனின் 5 மில்லியன் வருட பரிணாம வளர்ச்சியில் எமது சில மரபணுக்கள் பிரத்தியேகமாகத் தெரிவு செய்யப்பட்டு அவற்றில் கலோரிகள் சேமித்து வைக்கப் பணிக்கப்பட்டுள்ளன. அவை தான் பற்றாக்குறையான காலங்களில் உடலுக்குத் தேவையான கலோரி–களை வழங்குகின்றன. ஆனால் எமது சீரில்லாத உணவு முறைகளால் அளவுக்கதிகமான கலோரிகள் தேவையில்லாது உடல் மரபணுக்களில் தேக்கத்திற்கு உள்ளாகின்றன. இவ்வாறான மிகுதியான கலோரிகளால் 1.4 மில்லியாட் மக்கள் உடற்பருமனால் அவஸ்தைப்படுகின்றனர். இந் நிலைக்கு முக்கிய காரணியாகச் செயற்படுவது தொழிற்சாலைத் தயாரிப்பு உணவுப் பொருட்களேயாகும். ஏனெனில் இவ் வகையான உணவுகளில் அதிகமாக சுவைக்காகச் சேர்க்கப்படும் செயற்கைப் பொருட்கள் எமது மரபணுக்களால் இனங்காணப்பட முடியாமல் தேக்க நிலைக்குத் தள்ளப்படுகின்றன என உணவுத்துறைப் பேராசிரியர் Richard Béliveau தெரிவித்துள்ளார்.

- **இருதயத்தையும், இருதய இரத்த நாடிகளையும் பாதுகாக்க**

Chocolat noir, **தேங்காயெண்ணை, ஒலிவ்எண்ணெய் மற்றும்** Colza **எண்ணெய், கடலை வகைகள்** (noix, noisette), **பசுந்தேனீர்** (Thé vert) **முழுத்தானியங்கள், பூண்டு, சிகப்பு வைன், கொழுப்பான மீன்கள் (பெருங்கடல் அல்லது** Bio **சுமோ** (Saumon) **மீன், கானாங் கெளுத்தி** (Maquereau) **மற்றும்** Hareng **மீன்கள், முட்டைக்கோஸ் மற்றும் பச்சைக்கீரைகள்.**




**இரத்த** அழுத்தத்தைக் கட்டுப்படுத்த கறுப்பு சொக்லட்டை விடச் சிறந்த மருந்து ஏதுமில்லையென்கிறார்கள். நாளுக்கு 20 கிராம் கறுப்புச் சொக்லட் சாப்பிட்டால் அது மருந்து. தொழிற்சாலைத் தயாரிப்பு சொக்லட்டுகளைத் தவிர்க்கலாம். சொக்லட் மூலம் கிடைக்கக் கூடிய புரோட்டின்களால் இரத்த நாடிகள் சீராக இயங்கும் ஆற்றல் பெறும். இதன் மூலம் இருதயத்திற்கான இரத்த ஓட்டம் சீராகின்றது. அத்துடன் குருதித்தட்டுத் திரள் வையும் குறைக்கும். விட்டமின் 'C' அதிகமான பச்சைக்கீரைகள் மற்றும் கோவா வகைகள் அமினோ அமிலச் செறிவைக்கட்டுப்படுத்தும். அத்துடன் இருதய வெளித்தசைச் செயற்பாட்டையும் மேம்படுத்தும்.

நாளாந்தம் உண்ணும் சாதாரண வெள்ளைப் பாணுக்குப் பதிலாக முழுத்தானியப்பாண் வகைகளை (Pain aux céréales entières) உணவில் சேர்த்துக்கொள்வீர்களானால் அவற்றால் கிடைக்கப்பெறும் தாதுகள் மற்றும் விட்டமின்கள் மூளைக்கான இரத்த ஓட்டத்தைச் சீர்படுத்துகின்றன. மூளைக்கான இரத்த ஓட்டம் சீரில்லாததால் ஏற்படக்கூடிய பக்கவாத ஆபத்துக்கள் 40 சதவீதம் குறைய வாய்ப்புள்ளது.

ஒலிவ் எண்ணெயில் கிடைக்கக் கூடிய தாதுகள் மற்றும் மேற்குறிப்பிட்ட மீன்களிலிருந்து கிடைக்கக்கூடிய ஒமேகா 3 ஆகியவை உயர் இரத்த அழுத்தம் போன்ற இருதயக் குழலிய நோய்களிலிருந்து (Cardiovasculaire) எம்மைப் பாதுகாக்கின்றன. சிகப்பு வைன் இரத்த நாளங்களில் ஏற்படக்கூடிய கட்டிகளை வளரவிடாமல் தடுக்கிறது. பிரான்ஸ் நாட்டவர்களின் உணவில் கொழுப்புச் சேர்க்கை அதிகம், இருப்பினும் அவர்களது வைன் பாவனையின் காரணமாக ஆங்கிலேயர்களோடும், அமெரிக்கர்களோடும் ஒப்பிடும் பட்சத்தில் கரோனரி (Coronarienne) இருதய நோய்களால் மரணிப்பவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவானதாகும். இறுதியாக Thé Vert (பசுந்தேனீர்) நாளுக்கு இரண்டு முறை அருந்தினால் இருதய நோயால் மரணிப்பதற்கான சாத்தியம் 16 சதவீதமாகக் குறைய வாய்ப்புள்ளதாகவும் விஞ்ஞானம் தெளிவாகத் தெரிவித்துள்ளது. ●





யாழ்.பாஷையூர்
புனித அந்தோனியார்
முத்தமிழ் கலாமன்றம் - பிரான்ஸ்
நடாத்தும்
முத்தமிழ் கலைமாலை
27.04.2014

அஷ்டலக்சுமி கோயில்
சுவர்ண ஆகர்ஷண பைரவர்
ஜய வருட புத்தாண்டை முன்னிட்டு ஏப்ரல் மாதம் 2014 அன்று ஆலயத்தில் பைரவர் பிரதிஷ்டை நடைபெற உள்ளது. இதனை முன்னிட்டு விசேட பூஜைகள், அபிஷேகங்கள், ஹோமங்கள் நடைபெற உள்ளன.
சனி 12 சித்திரை 2014
இரவு 7 மணிக்கு பக்திப்பண்பாடமைந்த பட்டிமன்றம் நடைபெறும் உள்ளது.
1 Rue Ledru Rollin - 94600 Choisy-le-Roi - France
06 80 61 35 38 / 01.48.52.98.19




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சின்னட்டிக்கதை**

# அழகன்

**மெத்ரோ** வாசல்களில பழம் விக்கிற பொடியளப்பாத்திருப்பியள். அநேகமா பங்களாதேஷ் பெடியளாத்தானிருக்கும். பாவங்கள். குளிருக்க நிண்டு விறைக்க, விறைக்க கூவிக்கூவி வித்தாலும் பெரி சா ஒண்டும் தேறாது. பிரான்ஸ் சட்டப்படி இப்பிடி விக்கவுமேலாது.
ஒரு நாள் உப்பிடித்தான்
வித்துக்கொண்டு நிக்கேக்க
பொலிஸ் பிடிச்சுப்போட்டுது.
அந்தப்பெடியனக்கொண்டே
அவ்வளவு பழத்தையும் பூபலுக்க
போடிச்சுப்போட்டு பொடியனக்
கொண்டுபோனாங்கள். அதுக்குப்பிறகு
கனநாளா நான் பெடியன காணேல.

○

நேரம் இரவு 8.30.
மெத்ரோ நிலக்கீழ் குகையிலிருந்து
நான் வேகமாக வெளியே வந்தபோது
மழை லேசாக தூறிக்கொண்டிருந்தது.
உந்தத் தூறல்களையெல்லாம்
நான் கணக்கிலெடுத்து பலகாலம்
ஆகிவிட்டது.
ஓடி வந்து பஸ்தரிப்பிடத்தில்
நிமிர்ந்தேன். இன்னும் 20 நிமிடம்
இருப்பதாய் குறிகாட்டியது.

ஸ்ரோ டிகிரி குளிரையே தாங்கேலாது.
இதுக்குள்ள காத்து வேற.
விசர்விசராக் கிடந்துது.
விதியை நொந்தபடி நடுங்கிக்
கொண்டிருந்தேன்.
ஆள் நடமாட்டம் குறைவாகவே
இருந்தது. என்னிலிருந்து ஒரு பத்தடி
தூரத்தில் அதே இளைஞன் பழம்
விற்றுக் கொண்டிருந்தான். அந்தக்
குளிருக்குள்ளும்.

அவனைப் பார்த்தபோது என் குளிர்
கரைந்தது. நேரமும் கூடத்தான்.

பழம் வேண்டுவார் யாருமில்லை.
ஆனாலும், அவன் சலிப்பின்றி
உற்சாகமாக இருந்தான்.

ஒரு மூன்று, நான்கு இளங்குமரிகள்
அவனை அண்மித்தார்கள்.
அவர்கள் ரூமேனியாக்காரிகள்.
ரூமேனியாக்காரிகள் பற்றிய
விம்பம் என்னையும்மீறி என்னுள்
அழுத்தமானது. அவனைவிட
நான் உசாரானேன். என் கண்கள்
உன்னிப்பாயின.

அவனைச்சூழ்ந்து கொண்ட
அவர்கள் ஒவ்வரு பழங்களாக விலை
கேட்டுக்கொண்டிருக்க, ஒருத்தி நைஸாக
ஒரு பழத்தை உருவிக்கொண்டாள். அது
பவுத்திரமாக அவளது பொக்கற்றுக்குள்
நுழைந்துகொண்டது.

படக்கெனத் தாவியோடினேன்.
அந்தப்பதட்டத்திலும், கோபத்திலும்கூட
நான் ஒரு பக்குவ நிலையெடுத்தேன்.

'இஞ்ச பார், இந்தக்குளிருக்கு நிண்டு
அந்தப்பெடியன் விக்குது. ஒரு
அம்பது சதம்கூட லாபமெடுக்காது.
அதுாட்டப்போய் நீ களவெடுக்கிறியே!
இது ஞாயமா...'
நான் முடிப்பதற்குள் அவர்கள்
என்னைச்சூழ்ந்து கொண்டார்கள்.
வழமையாக இப்படி ஒரு சூழ்நிலையில்
ஓடி விடக்கூடியவர்கள் இன்று
மோதலுக்குத் தயாரானார்கள்.
'ஆமோ நீ கண்டனியோ என்றவாறு
கிட்ட வந்தார்கள்.

எனக்கு நிலைமை விளங்கிவிட்டது.
அவர்கள் என்னிடம் ஏதோ அட்டயப்
போடப்போகிறார்கள்...

'ஓம் நான் கண்டனான்' நானும்
உரத்துச்சத்தம்போட்டுக் கத்தினேன்.

நான் உரத்துச்சத்தம் போட்டதிற்கும்
காரணங்கள் இருந்தன. ஒன்று
என்னுடைய பயத்தை மறைப்பது.
அடுத்தது தூர இடத்திலிருந்தாவது
யாரையாவது உதவிக்கு கூப்பிடுவது.
ஆனால் எதுவும் சாத்தியமாகவில்லை.
யாருக்காக நான் குரல் கொடுத்தேனோ
அவன், தனக்கும் இதுக்கும்
சம்பந்தமேயில்லை என்பதுபோல
தன்பாட்டிற்கு நின்றுகொண்டிருந்தான்.

எனக்கு கோபம்கோபமாக வந்தது.
நான் இன்னும் உரத்துக்
குரலெடுத்தேன்.
அடுத்த மெத்ரோ வர சிலர்
வரத்தொடங்கினார்கள்.
ஆட்களைக்கண்டதும்
ரூமேனியாக்காரிகள் மெதுவாக
கழரத்தொடங்கினார்கள்.

எனக்கு ப்ரெஷர் ஏறிக்கொண்டிருந்து.
மூச்சு வேகமாகிக்கொண்டிருந்தது
பங்களாதேஷ்காரனைப்பார்த்தேன்.
அவன் பழக்கூடையை நிரப்பி
தன்வியாபரத்தில் கவனமாயிருந்தான்.

ச்சா! என்ன உலகமடா!
பொறுமையிழந்து அவனிடம் நேரடியா
கவே கத்தினேன்.
' பார்.. உனக்காவண்டி நான்
சண்டைபிடிக்கிறன், நீ...ந்..நீ.. பேசாமல்
இருக்கிறாய்..'
குனிந்தபடி இருந்துகொண்டே
சொன்னான்
'அவள் பழமெடுத்ததை நானும்
கண்டனான்'

எனக்கு திக் கென்றது.


'என்ன கண்டனியோ?'

'ஓம், கண்டனான். ஓம் இப்ப அதுகள்
என்னத்த எடுத்துப்போட்டுதுகள். இப்ப
எத்தின மணி, பசிநேரம்..ஒரு பழத்தை
தானே எடுத்ததுகள்.. சரி, சரி விடு
விடு என்றான்'
அவனுக்கும் பெரிய அளவில்
மொழிஅறிவில்லை. ஆனாலும் அவன்
தடக்கித்தடக்கி சொன்னதை நான்
விளங்கிக்கொண்டேன்.

என்னைவிட அவனுக்கு ஒரு
பத்துவயதாவது குறைவாக இருக்கும்!
நான் விறைத்தபடி நிற்க, என்னுடைய
கடைசி பஸ்சும் என்னைக்கடந்து
போய்க்கொண்டிருந்தது...


○

– அசோகா
6.3.2014



08.03.1974 இல் திறந்து வைக்கப்பட்ட றுஅஸ்ஸி (Roissy) விமான நிலையம் தனது 40ஆண்டு நிறைவை கொண்டாடியது. இது ஐரோப்பாவின் இரண்டாவது பெரிய விமான நிலையமாகும்.

ஆரம்பத்தில் நாளாந்தம் 7000 பயணிகள் பயணம் செய்தனர். தற்போது நாளாந்தம் 170 000 பயணிகள் சராசரியாக பயணிக்கின்றனர்.




2013ம் ஆண்டில் 6 கோடி 20 இலட்சம் பயணிகள் 300 இடங்களிற்கு பயணித்துள்ளனர். பிரான்சின் இரண்டாவது விமான நிலையமான Orly இல் இருந்து 55,000 பயணிகள் நாளாந்தம் பயணம் செய்கின்றனர்.

ஐரோப்பாவில் ஹீத்றோ (Heathrow-London) விமான நிலையத்தில் இருந்து வருடாந்தம் 7 கோடி பயணிகளிற்கு மேல் பயணம் செய்கின்றனர். இது 1227 ஹெக்ரர் நிலப் பரப்பில் அமைந்துள்ளது.

Roissy விமான நிலையம் 3257 ஹெக்ரர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. 2023–2024 காலப்பகுதியில் 8கோடி (80மில்லியன்) பயணிகள் ஆண்டு தோறும் பயணிக்கக்கூடிய வசதிகளைக் கொண்டிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தடுமாறும் உக்ரைன்

**சோவியத்** யூனியனிலிருந்து பிரிந்த உக்ரைன் 24 ஆண்டுகளின் பின்னர் ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைவதற்காக போராட்டம் நடாத்தியது. இலட்சக் கணக்கான மக்கள் பங்குபற்றிய போராட்டத்தில் பலநூறு பேர் பலியெடுக்கப் பட்டுள்ளனர்.

போராட்டத்தின் உக்கிரம் காரணமாக ஜனாதிபதி விக்ரர் லனோகோவிற்ச் (Victor Lanoukovitch) தனது பதவியை விட்டு விலகி தலைமறைவாகியுள்ளார். இவரின் மாளிகை 140 ஹெக்டர் பரப்பளவில் தலைநகரான கிவ் (Kive) நகருக்கு அண்மையில் அமைந்திருந்தது. பொதுமக்கள் இவரது ஆடம்பர மாளிகையைக் கைப்பற்றிய பின்னர் தனியான மிதக்கும் உணவகம், கொல்ப் (Golf) விளையாட்டு மைதானம், ஆடம்பர கார்கள் ஆகியவற்றைத் தாக்கிச்சேதப்படுத்தியுள்ளனர்.

தற்போது முன்னாள் ஜனாதிபதிக்கு சோவியத் யூனியன் புகலிடம் வழங்கியுள்ளதாக நம்பப்படுகின்றது.

உக்ரைன் நாட்டில் 78% ஆன மக்கள் உக்ரைன் மொழியையும் 18% ஆன மக்கள் ரஷ்ய மொழியையும் பேசுபவர்களாக உள்ளனர்.

உக்ரைனின் தென்கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள கிறிமியா (Cremea) என்ற பிரதேசம் ரஷ்யாவிற்கு பக்கத்தில் உள்ள குடாநாடாகும். இங்கு 20 இலட்சம் மக்கள் வாழ்கின்றனர். இப் பிரதேசம் 25,100 சதுர கிலோமீட்டர் பரப்பளவைக் கொண்டது. இப்பிரதேச மக்களில் 58% ஆனோர் ரஷ்ய மொழியைப் பேசுபவர்கள் ஆவர்.

1991 இலேயே கிறிமியா பிரதேசம் உக்ரைனின் ஓர் சுயாட்சிப் பிரதேசமாக அங்கீகரிக்கப்பட்டிருந்தது. தற்போது கிறிமியா பகுதியை தன்னுடன் ரஷ்யா இணைத்துள்ளது.

கிறிமியாவை ரஷ்யாவுடன் இணைப்பதற்கு சர்வஜன வாக்கெடுப்பு நடாத்தவும் ரஷ்யா படைகளை அங்கு அனுப்பவும் ரஷ்யா பாராளுமன்றம் ரஷ்யா ஜனாதிபதி புட்டினுக்கு அதிகாரம் வழங்கியிருந்தது.

சர்வஜன வாக்கெடுப்பு அரசியற் சட்டத்திற்கு முரணானது என்கிறார் அமெரிக்க அதிபர் ஒபாமா. ரஷ்யா படைகள் கிறிமியா பிரதேசத்தில் நிலை கொண்டுள்ளன. ரஷ்யாவின் முடிவை அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும் எதிர்த்த வண்ணமேயுள்ளன. ○

**நல்ல மனிதரை நல்ல மனிதரால் மட்டுமே இனங்காணமுடியும்.**



# தங்க நுகர்வு

## இந்தியாவைப் பின்தள்ளிய சீனா

2013ல் அதிக தங்கம் சீனாவில் நுகரப்பட்டுள்ளது. 2013ல் மட்டும் 1066 தொன் தங்கம் சீன மக்களால் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. இதுவொரு மாபெரும் சாதனையாகும். ஏனெனில் 1950 இல் இருந்து தங்க நுகர்வில் இந்தியாவே முதலிடத்திலிருந்து வருகிறது. 2013ல் 975 தொன் நுகர்வோடு இரண்டாமிடத்திற்குத் தள்ளப்பட்டுள்ளது. தங்கப்பாளக் கையிருப்பு நாடுகளில் அமெரிக்கா முதலாவது இடத்திலும் தொடர்ந்து ஜேர்மனி இடம்பிடிக்க பிரான்ஸ் ஐந்தாவது இடத்தைப் பிடித்துள்ளது. தங்க உற்பத்தியில் சீனாவைத் தொடர்ந்து அவுஸ்திரேலியா தென் ஆபிரிக்கா ஆகியவை முன்னிலையில் உள்ளன.

## டொற் பாரிஸ்
# .PARIS

**இ**ணையத்தில் **.paris** வலைத்தளப் பெயரைச் சொந்தமாக்கிக் கொள்ள பிரான்ஸ் நீண்டகாலமாக விண்ணப்பித்திருந்தது. 21.02.2014ல் அவர்களின் விண்ணப்பத்திற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவ் அனுமதியை இணையத்தளப் பெயர்களைக் கட்டுப் படுத்தும் ICANN (Internet Corporation for Assigned and Names and Numbers) அமைப்பு வழங்கியுள்ளது. இணையப் பெயர் பதிவிற்கு வருடாந்தம் சில பத்து யூரோக்களே கட்டணமாக இருப்பது வழக்கம். ஆனால் .paris என நிறைவுறும் முதல் 100 வலைத்தளங்களிற்கு வருடாந்த பெயர்ப் பதிவு ஒன்றிற்கு 140000 யூரோக்கள் கட்டணம் அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது நாட்டின் பெயர் போல் நகரின் பெயரில் முதன் முதலாக .Parisஎன்று வலைத்தளத்திற்கு பெயர் வழங்கப்படுகின்றது.

இவ்வாறு இலண்டன் நகருக்கு .london என்றும் றோம் நகருக்கு .roma என்றும் நியூயோர்க் நகருக்கு .nyc (New York City) என்றும் பெயர்கள் பாரிசுக்கு அடுத்ததாக வழங்கப்படவுள்ளன. ○

**○ நீங்கள் மேலானவரே!**

*உங்கள் பாத்திரத்தின்*
*உணவிருந்தால்..*
*உடுத்த உடையிருந்தால்..*
*தலை மேல் கூரையிருந்தால்..*
*உறக்கம் கொள்ள இடமிருந்தால்..*
*உலகின் 75 சதவிகித மக்களை விட*
*நீங்கள் மேலானவரே!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# • துயர் பகிர்வு •

**அமரர்**
**இராமசாமி தில்லைநாதன்**
(நான்காவது வருடம்)
தோற்றம் : 19. 02. 1951
மறைவு : 25. 01. 2010





**அமரர்**
**வேலுப்பிள்ளை அன்புழகன்**
(முதலாவது வருடம்)
தோற்றம் : 27. 06. 1967
மறைவு : 09. 02. 2013

**அமரர்**
**வேலுப்பிள்ளை செல்வராஜா**
(முதலாவது வருடம்)
தோற்றம் : 10. 03. 1947
மறைவு : 28. 04. 2013





**அமரர்**
**சண்முகநாதன் அன்னலட்சுமி**
(யாழ். அல்லைப்பிட்டி)
தோற்றம் : 01. 09. 1937
மறைவு : 21. 01. 2014

**அமரர்**
**மதியாபரணம் நாகேந்திரன்**
(வட்டுக்கோட்டை)
தோற்றம் : 05. 12. 1975
மறைவு : 25. 01. 2014





**அமரர்**
**இராசரெத்தினம் புவனேஸ்வரி**
(நயினாதீவு 5ம் வட்டாரம்)
தோற்றம் : 13. 12. 1941
மறைவு : 01. 02. 2014


**அமரர்**
**இராசக்கோன் குழந்தைவேலு**
(சரசாலை)
தோற்றம் : 21. 11. 1930
மறைவு : 14. 02. 2014





**அமரர்**
**அமிர்தலிங்கம் செந்தூரன்**
(நாரந்தனை வடக்கு)
தோற்றம் : 20. 11. 1981
மறைவு : 16. 02. 2014

**அமரர்**
**லியோனிஸ் பெலார்மின்**
(நாரந்தனை)
தோற்றம் : 07. 11. 1959
மறைவு : 18. 02. 2014






**அமரர்**
**தவயோகநாதன் நித்தியா**
(Drancy)
தோற்றம் : 08. 11. 1996
மறைவு : 27. 02. 2014

**அமரர்**
**கனகாம்பிகை மாரிமுத்து**
(யாழ் நாச்சிமார் கோயிலடி)
தோற்றம் : 11. 01. 1932
மறைவு : 10. 03. 2014



## நிலா குறுக்கெழுத்துப் போட்டி - 10



**மேலிருந்து கீழ்**

1. கப்பல், படகு போன்றவற்றை தேவையான திசையில் செலுத்த தேவையான கருவி (4)
2. 1983ல் ரஜினியின் நடிப்பில் வெளியான திரைப்படம் (4)
3. மன்னராட்சியை இப்படியும் அழைக்கலாம் (5)
4. மகாபாரதத்தில் குந்திதேவியின் மூத்த மகன் – துரியோதனனின் நெருங்கிய நண்பன் (4)
6. தாவரங்கள் பற்றிய அறிவியல் கல்வி (6)
7. ஆர்வம் அல்லது அக்கறை என்று கொள்ளலாம் (4)
8. வீடு, கோயில் அல்லது விளக்கு வைப்பதற்காகச் சுவரில் இருக்கும் குளிவான பகுதி / (குழம்பியுள்ளது) (3)
9. கோபம் (3)
10. துக்கம் (4)

**வலமிருந்து இடம்**

10. வீடுகளில் சற்று உயரமான கட்டுமானத்தை உண்டாக்கி அலங்காரத்துடன் கூடிய சிறிய தொட்டிகளில் துளசிச் செடியை வளர்த்து வழிபடுவார்கள். துளசிச் செடி வளர்க்கப்படும் தொட்டியை இவ்வாறு அழைப்பார்கள்(6)

**இடமிருந்து வலம்**

1. சுத்தம், நலமான வாழ்வு கருதி சமூகத்தால் பேணப்படுவது (5)
3. பாரிசில் கவிஞர் அருந்ததியின் இயக்கத்தில் வெளியான முழு நீளத்திரைப்படம் (3)
5. தமிழர் விளையாட்டுக்களில் ஒன்று. சடு குடு என்றும் அழைக்கப்படுகிறது (3)
6. கோலியாத்தை எதிர்த்து நின்றவர் (3)
7. 2009ல் ஆதி நடித்து சங்கரின் தயாரிப்பில் வெளியான திரைப்படம் (3)
11. ஒரு வட்டத்தின் எதிரெதிர் புள்ளிகளை மையப்புள்ளி வழி இணைக்கும் நேர்கோடு (4)
13. சவ்வரிசி, பால், சேமியா கலந்து தயாரிக்கப்படும் தமிழர் விருந்துகளில் முக்கிய இடம் வகிக்கும் உணவு (4)
14. சைவர்கள் சிவபெருமானாக நினைத்து வழிபடும் லிங்க உருவம்(6)

● நிலா குறுக்கெழுத்துப்போட்டி இல.9ல் பரிசு பெறுபவர்கள்.
1. திரு. சத்தியமூர்த்தி சுப்பிரமணியம் (Paris 75012)
2. பிரசாந்தன் விஜிதா (Le Bourget)
3. கனகராஜன் சாந்தகுமாரி (Stains)

✔ உங்கள் பதில்களை 10 மே 2014 இற்கு முன்னர் அனுப்பி வைக்கவும்
✔ சரியான பதில்கள் எழுதியவர்களில் மூவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும்.

● சரியான விடை எழுதி அனுப்பிய அனைவருக்கும் எமது வாழ்த்துக்கள்

● சரியான விடையை அனுப்பியவர்களின் முழு விபரங்களையும் www.nilafrance.com இல் பார்க்க முடியும்.

**பரிசில்களை சங்கீதா அச்சகத்தில் நேரில் வந்து நீங்கள் பெற்றுக்கொள்ளலாம்!**

• அனுப்ப வேண்டிய முகவரி •
**NILA, 39 Bd. de la Chapelle - 75010 PARIS**

## இந்த ஆண்டின் சிறந்த கார்



ஜெனிவாவில் இடம்பெற்ற வாகனக் கண்காட்சியில் பேஜோ–308, கார் 2014ம் ஆண்டிற்கான பெருமை மிக்க வண்டியாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

உலகெங்கும் இருந்து தேர்வு செய்யப்பட்ட 29 வண்டிகள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. சென்ற ஆண்டில் 55 000 வண்டிகள் ஐரோப்பாவில் விற்பனையாகி யிருந்தன. 'Car of the year' என்ற பரிசு இந்த வண்டிக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னதாக 1969 இல் La Peugeot 504 இற்கும், 1988 இல் La Peugeot 405 இற்கும், 2002 இல் La Peugeot 307 இற்கும் விருதுகள் வழங்கப்பட்டிருந்தன.

**அமரர்**
**கல்யாணி சுப்பிரமணியஐயர்**
(டென்மார்க், லண்டன்)
தோற்றம் : 14. 12. 1954
மறைவு : 16. 03. 2014



**அமரர்**
**வைத்திலிங்கம் சந்திரசேகரம்**
(முதலாம் ஆண்டு)
தோற்றம் : 16. 10. 1946
மறைவு : 01. 04. 2013



**அமரர்**
**அந்தோனிப்பிள்ளை பிலோமினா**
(பருத்தித்துறை)
தோற்றம் : 09. 09. 1926
மறைவு : 31. 01. 2014



**அமரர்**
**ஐறின் மேரி கிறிஸ்டா ஜேசுதாசன்**
(இராஜேஸ்வரி)
தோற்றம் : 14 . 12 . 1953
மறைவு : 07 . 03 . 2014





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரான்ஸ் :
# உள்ளூராட்சித் தேர்தல்கள்




● முதன் முதலாக 1945 ஆண்டில் உள்ளூராட்சித் தேர்தல்கள் இடம் பெற்றன.
தற்போது 7 ஆண்டுகளுக்கு ஒரு முறை இத் தேர்தல்கள் இடம் பெறுகின்றன.

● 39782 உள்ளூராட்சிச் சபைகள் பிரான்சிலும் கடல் கடந்த பிரதேசங்களிலும் இயங்குகின்றன.

● உள்ளூராட்சிச் சபைகளில் 100 பேருக்குக் குறைந்தவர்கள் வாழும் இடங்களிற்கு 7 உறுப்பினர்களும் 3 இலட்சம் மக்களிற்கு கூடுதலான மக்கள் வாழும் நகரசபைகளிற்கு 69 உறுப்பினர்களும் தெரிவு செய்யப்படுவர்.

● பிரான்சில் உள்ள முக்கிய மூன்று நகரங்களாகிய லியோன் (Lyon), மார்சை (Marseille), பாரிஸ் (Paris) போன்றவற்றிற்கு முறையே 73, 101, 163 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர்.

● தேர்தலிற்கு கட்சிகள் தனித்தனியாக தங்கள் உறுப்பினர் பட்டியலை வழங்குகின்றன. 50% வாக்குகளை பெறும் கட்சி ஆகக்குறைந்தது 50% ஆன ஆசனங்களைப் பெறும். 5% இற்கு கூடுதலான வாக்குகளைப் பெற்ற கட்சிக்கே விகிதாசார அடிப்படையில் ஆசனங்கள் வழங்கப்படும்.

● பெரிய உள்ளூராட்சிச் சபைகளான பாரிஸ், லியோன், மார்சை போன்ற 3 நகரங்களிலும் வட்டார வாரியாக நடைபெறும் தேர்தல்களில் உறுப்பினர்கள் விகிதாசார முறையில் தெரிவு செய்யப்படுவர். பாரிஸ் நகரமே அதிகூடிய உறுப்பினர்ளைக் கொண்ட மாநகர சபையாகும்.

● 18 வயதிற்கு மேற்பட்டவர்கள் தேர்தலில் வாக்களிக்கவும் உள்ளூ ராட்சி உறுப்பினர் தேர்தலில் போட்டியிடவும் முடியும். மூன்று மாதத்திற்கு மேல் பிரான்சில் வசிக்கும் ஐரோப்பிய ஒன்றிய மக்கள் இத்தேர்தலில் வாக்களிக்க முடியும்.

பெரிய மாநகரசபைகள் மாநகர அபிவிருத்திக்காக தாங்களே திட்டமிடல் வேலைகளைச் செய்து பாரிய அபிவிருத்தித் திட்டங்களை செயற்படுத்த சுயாதீனமாக (Autonomie) நிதி வளத்தைப் பயன்படுத்தும் அதிகாரத்தையும் கொண்டிருக்கின்றன.

இந்த ஆண்டு மார்ச் 23ல் முதல் சுற்றும் மார்ச் 30ல் இறுதி சுற்றுமாக தேர்தல் நடைபெறுகின்றது.




உலகம் முழுவதும் உள்ளூராட்சித் தலைவர்களாக பெரும்பாலானோர் ஆண்களாகவே உள்ளனர்.
பிரான்சிலும் இதுவரை இவ்வாறே உள்ளது. ஆனால் அண்மையில் இடம்பெற்ற புள்ளி விபரக் கணக்கு வித்தியாசமான நிலமையைத் தெரிவித்துள்ளது.

பிரான்சில் 1947ம் ஆண்டில் இருந்த பெண் உள்ளூராட்சித் தலைவர்கள் 0.7% ஆக இருந்தனர். 60 ஆண்டுகளின் பின்னர் இவர்கள் தொகை 14% ஆக அதிகரித்துள்ளது.

பிரான்சில் உள்ள 36 683 உள்ளூராட்சிச் சபைகளில் தற்போது 3946 பெண்கள் உள்ளூராட்சித் தலைவர்களாக உள்ளனர். லில் (Lille), மொன்றியல் (Montreuil) போன்ற பெரு நகரங்களில் தற்போது 'நகரமாதா' தலைமையிலேயே உள்ளூராட்சிகள் இயங்குகின்றன.

நடப்பாண்டில் நடைபெற இருக்கும் தேர்தலில் பாரிஸ் நகருக்கு நகரமாதா ஒருவர் தெரிவுசெய்யப்பட உள்ளார். வலதுசாரி, இடதுசாரி கூட்டணிகளின் முதன்மை வேட்பாளர் இருவரும் பெண்களாகவே உள்ளனர். சோசலிசக் கட்சி சார்பாக ஆன் இடால்கோ (Anne Hidalgo) போட்டியிடுகின்றார். UMP கட்சி சார்பாக நத்தலி குசியுஸ்கோ–மொறிசத் (Nathalie Kosciusko-Morizet) போட்டியிடுகின்றார்.




# பத்து வயதை எட்டும் FACEBOOK

நியூயோர்க்கைச் சேர்ந்த 20 வயது பல்கலைக்கழக மாணவரான Mark Zuckerberg விளையாட்டாக பல்கலைக்கழக நண்பர்களுடன் புகைப்படங்கள் மற்றும் தகவல்களைப் பகிர்ந்து கொள்ள ஆரம்பித்தார். அதுவே இன்று தவிர்க்க முடியாத சமூக வலைத்தளமாக (Facebook) வளர்ந்து நிற்கிறது.

Facebook சமூக வலைத் தளம் 4 பெப்ரவரி 2004ல் ஆரம்பிக்கப்பட்டது. உலகளவில் இணையம் உபயோகிப் போரின் தொகை 2.5 மில்லியாட் ஆகும். இதில் ஒரு மில் லியாட் மக்கள் Facebook கணக்கு வைத்துள்ளனர். ஒரு மில்லியாட் என்பது உலக மக்கள் தொகையில் நான்கில் மூன்று பகுதியினராகும். உலகில் Google க்குப் பின் அதிகம் பயன்படுத்தப்படும் வலைத் தளமான Facebookன் இறுதிக் காலாண்டு வருமானம் 2, 6 மில்லியாட் டொலர்களாகும். பெரும் பகுதி விளம்பரங்கள் மூலமே கிடைக்கப் பெறுகின்றது. உலகின் இளைய மில்லியாடர் அந்தஸ்தும் Marc Zuckerberg க்கே வழங்கப்பட்டுள்ளது. இன்றைய திகதியில் அவரது வயது 30 ஆகும். உலகில் Facebook உபயோகிப்போரில் முதல் 10 இடங்களில் அமெரிக்கா முதலாவது இடத்திலும் இந்தியா இரண்டாவது இடத்திலுமுள்ளன. பிரான்ஸ் 25 மில்லியன் பேருடன் ஒன்பதாவது இடத்திலேயே உள்ளது.


Facebook கணக்கு தொடங்க மிகக் குறைந்த வயது 13 ஆகும். Facebook இன் தாக்கம் அரசியலையும் விட்டு வைக்கவில்லை. 2011 எகிப்தியப் புரட்சியின்போது Facebook சமூகத்தளம் முக்கிய பங்கு வகித்தது. இக்கால கட்டத்தில் ஒரு எகிப்தியத் தம்பதியினர் தங்கள் குழந்தைக்கு Facebook என்று பெயர் சூட்டி மகிழ்ந்தனர்.

Facebook பாவனை மீது பலருக்கும் பலவித விமர்சனங்கள் உள்ள போதிலும் ஒரு Like குக்காக காத்திருப்போரின் எண்ணிக்கை அதிகரித்த வண்ணம் தான் உள்ளது.

**இன்றைய திகதியில் facebook ன் பங்குச்சந்தை மதிப்பு மட்டும் 150 மில்லியாட் டொலர்களாகும். இது பங்குச்சந்தையில் நுழைந்து வெறும் 18 மாதங்களில் ஏற்படுத்திய சாதனையாகும். வேறெந்த அமெரிக்க நிறுவனாங்களும் இக்குறுகிய காலகட்டத்தில் இவ்வாறான உயரத்தை எட்டவில்லை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## 1. பிரான்சில் இளம்பருவத்தினர் வயதுக்கு வரும் வயது குறைகின்றது

பிரான்சில் இளம்பருவத்தினர் வயதுக்கு வரும் வயது 2000 ஆண்டிலிருந்து குறைந்து வருகின்றது என அவதானிப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இருபது ஆண்டுகளுக்கு முன்னர், இளம்பருவத்தினரில் பெண்பிள்ளைகள் 10–12 வயதளவிலும் ஆண்பிள்ளைகள் 11–16 வயதளவிலும் பெரியபிள்ளைகள் ஆனார்கள். ஆனால் இக்காலத்தில் இவர்கள் வயதுக்கு வரும் வயது, முன்னரிலும் பார்க்க இரண்டு வயது குறைந்திருக்கின்றது.

இப்பருவமாற்றத்திற்கு பல காரணிகள் பங்கு கொள்கின்றன. அவற்றில், பிள்ளைப்பிராயத்தில் நோய்களினால் பீடிக்கப்படுவது குறைவாக இருத்தல், பல்வேறுபட்ட உணவுகள், பெற்றோர்கள்–பிள்ளைகளுக்கிடையிலான உறவில் கடுமை தளர்வு, இளம்பருவத்தினர் வயதுவந்தவர் போல் நடந்து கொள்ளல் மற்றும் சூழலியல் மாற்றம் என்பன பெரும் பங்கு எடுக்கின்றன.

## 2. பாக்கில் (Bac) 100 % சித்தி தந்த உயர்கல்லூரிகள்...



பிரான்சில் நூறு உயர்கல்லூரிகள் (Lycées) சிறந்த உயர்கல்லூரிகளாக தேசியக் கல்வி அமைச்சினால் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. இக்கல்லூரிகளில் 2012 இல் பாக்கலோரியா (Baccalauréat) – பாக் (Bac) தேர்வுக்குத் தோற்றிய மாணவர்கள் அனைவரும் உயர்ந்த மதிப்பெண்கள் பெற்று, பாக் சான்றிதழ் பெற்றிருந்தனர். அதன் அடிப்படையில் பிரான்சில் உள்ள அரசு மற்றும் தனியார் உயர்கல்லூரிகளுமாக நூறு சிறப்புப் பெறுகின்றன. அவற்றில் முதல் பத்து கல்லூரிகள் தரப்படுகின்றன.

| Lycée / statut ville code postal | Réussite au Bac |
|---|---|
| 1. Lycée privé Averroès<br>privé sous contrat - Lille 59000 | 100% |
| 2. Lycée ESAA Ecole Boulle<br>public - Paris 75012 | 100% |
| 3. Ecole active bilingue Jeannine Manuel<br>privé sous contrat - Paris 75015 | 100% |
| 4. Lycée Louis Le Grand<br>public - Paris 75005 | 100% |
| 5. Lycée Henri IV<br>public - Paris 75005 | 100% |
| 6. Lycée Hoche<br>public - Versailles 78000 | 100% |
| 7. Lycée Epin<br>privé sous contrat - Vitry-sur-Seine 94400 | 100% |
| 8. Lycée des Châtaigniers<br>privé sous contrat - Versailles 78000 | 100% |
| 9. Lycée international<br>public - Saint-Germain-en-Laye 78100 | 100% |
| 10. Lycée Franco-Allemand<br>public - Buc 78530 | 100% |

## 3. மீனுக்காக பூனையை மின்னடுப்பில் வைத்தவருக்குச் சிறை



மீன்தொட்டியில் வளர்த்த செம்மீன் ஒன்றைச் செல்லப்பிராணியான பூனை பிடித்தது. அதற்காக ரௌத்திரம் அடைந்த வளர்ப்புக்காரி அப்பூனையைப் பிடித்து மின்னடுப்பிற்குள் ஐந்து நிமிடங்கள் அடைத்து வைத்துத் தண்டனை கொடுத்தார். அவரின் மனங்கேட்காமலோ என்னவோ வைத்த ஒரு நிமிடத்திற்குள் முடுக்கிய மின்னடுப்பை நிறுத்திக் கையை உள்ளே வைத்துப் பிடித்தபோது, கையில் கருகிய பூனைதான் துவண்டது.

23 வயதான Laura Cunnliffe எனும் ஆங்கிலேயப் பெண்ணுக்கு 14 கிழமைகள் சிறைத்தண்டனை வழங்கப் பட்டுள்ளது. மேலும் இவ்விளம் பெண் செல்லப்பிராணியோ அல்லது மிருகங்களோ வளர்ப்பதற்கு வாழ்நாள் தடை விதிக்கப்பட்டுள்ளது. வளர்ப்புப் பிராணி எசமாட்டியிடம் வைத்த நம்பிக்கைக்குத் துரோகம் செய்தமைக்காகவே இத் தண்டனையை வழங்கிய நீதி பதி தன்தீர்ப்பு விளக்கத்தில் குறிப்பிட்டிருக்கின்றார்.




## 4. மதத்திற்காக மகனை பாடசாலையிலிருந்து நிறுத்திய தாய்


இருபத்தியேழு வயதான ஓர் இளந்தாய் ஒருவர் பன்னிரண்டு வயதான தன்மகன் பாடசாலைக்குச் செல்வதை நிறுத்திய சம்பவம் சார்த்ரில் இடம்பெற்றுள்ளது. தன் மகன் 'பள்ளிக்கூடத்தில் கெட்ட விடயங்களைப் படிக்கின்றார்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்பிள்ளைகளுடன் பழக்கம் வைத்திருக்கின்றார். இவை இஸ்லாமிய மதக் கோட்பாடுகளுக்கு முரணானவை' என்று காரணம் கூறி தன்செயலுக்கு நியாயம் கற்பித்தார்.

இச்சிறுவன் பாடசாலைப் பாடங்களைப் படிப்பதை விட்டு, இஸ்லாம் சொல்கிறபடி நடக்க வேண்டும் என கட்டளை இட்டு வீட்டில் தடுத்து வைத்திருந்தார். சிறுவன் அங்கிருந்துத் தப்பிச் சென்று தந்தையின் குடும்பத்தார் வீட்டில் தஞ்சம் அடைந்திருக்கின்றான். இச்செயலை அறிந்த சார்த்ர் நீதிமன்றம் அந்த இளந் தாய்க்கு ஆறுமாதச் சிறை வாசம் விதித்திருக்கின்றது



## 5. சொற்புணர்ச்சி - சந்திப்பிழை

**சொற்கள்** அல்லது சொல்லின் உறுப்புகள் பொருள் தரும் வகையில் ஒன்றோடு ஒன்று இணைந்து வருவதே சொற்புணர்ச்சி எனப்படும். இரு சொற்கள் சேரும் நிலை சந்தி என அழைக்கப்படும். இரண்டு சொற்கள் ஒன்றாக வருகையில், முதலில் வரும் சொல் நிலைமொழி எனவும், அடுத்து வரும் சொல் வருமொழி எனவும் அமைகின்றன. சொற்கள் ஒன்றாக வரும் போது எழுத்துக்களுக்கு ஏற்ப சந்தி பொருந்தாத போது அங்கு சந்திப்பிழை ஏற்படுகின்றது. அதனால் பொருளின் பொருத்தமும், சுவையும், ஓசைநயமும் இல்லாமற் போகும் நிலை உண்டாகின்றது.

- சந்திப்பிழை பொருளில் குழப்பம் தருகின்றது.
  – அழகே நீ ஓர் பூகம்பம் தானா! அருகில் வந்தால் பூக்கம்பம் தானா!
  (துப்பாக்கி)

  – வேலன் வேலைச்செய்யும் வேலை செய்தான்.
  சிறு நீர்ப்பாசனம். சிறுநீர்ப் பாசனம்.

- ஒரு சொல்லின் உறுப்புக்கள் ஒன்றோடு ஒன்று இணைந்து வருவது அகப்புணர்ச்சி எனப்படும்.
  – காண் + ட் + ஏன் = கண்டேன்.

- இரண்டு அல்லது பல சொற்கள் ஒன்றோடு ஒன்று இணைந்து சொற்றொடராகவோ, வாக்கியமாக வருவது புறப்புணர்ச்சி எனப்படும்.
  – எனக்கு + எல்லோரும் + உதவுகின்றனர் = எனக்கெல்லோரும் உதவுகின்றனர்.

  – ஒன்று + ஒடு + ஒன்று + இணைந்து = ஒன்றோடொன்றிணைந்து

(தொடரும்).....


## Sachchi Education – Annamalai University

சித்தி தரும் ரியூஸன் கல்வி

- உங்கள் பிள்ளைகளின் றிப்போட்டில் மதிப்பெண் குறைவாக இருக்கின்றதா ?
- அடுத்த வகுப்புக்குப் போக வகுப்பு நிலை போதவில்லையா ?

எங்களிடம் அனுப்புங்கள் உறுதியாக முன்னேற்றித் தருகின்றோம்!

இம் முதற்பாடசாலை படிப்புக்கும் ஒழுக்கத்திற்கும்

**No : 1 ஆக இருப்பதற்கான காரணங்கள்...**

- பிரெஞ்சுக் கல்வி முறையில் நீண்டகால அறிவும் தகுதியுடனான அனுபவமும் உடைய நிர்வாகம்
- கல்வித்தகமையும் கற்பிப்பதில் அனுபவமும் உடைய பிரெஞ்சு ஆசிரியர்கள்
- மாணவர்களை தனித்தனியே கவனிக்கும் கல்வி முறை
- மாணவர்களுக்கான பெரிய கல்விநூலகம்
- குறைந்த கட்டணத்தில் எல்லாப் பாடங்களையும் கற்பிக்கும் வசதி

- École : PS.MS. GS. CP.CE1. CE2. CM1. CM2. Clin...
- Collège : 6e. 5e. 4e. 3e. Segpa. Clipa...
- Lycée : Seconde. Première. Terminale, BEP. CAP. BTS ...

- புதிய மொழி வகுப்புகள் :

பிரெஞ்சு, தமிழ், ஆங்கிலம்

தொடக்க நிலை, இடைநிலை, உயர் நிலை, பேச்சு மொழி, மற்றும்

பரதநாட்டியம், வாய்ப்பாட்டு, வயலின், குங்:பூ, கணினி

sachchithanantham@gmail.com

70, rue Philippe de Girard 75018 PARIS Tél : 01 46 07 16 00



# நிலா

நிலாவினைப்பெற்றுக்கொள்ள..

**சங்கீதா அச்சகம்**
39, Bld. de la Chapelle - 75010 PARIS

**ரூபி அச்சகம்**
10, Rue Labat - 75018 PARIS

**CHANGE MAGENTA**
77, Bld. de Magenta - 75010 PARIS

**ASI BOUCHERIE**
195, Rue du Fbg.St.Denis - 75010 PARIS

**தமிழ்ச்சோலை -பாரிஸ் 17**

**M.G.A. Coiffure**
20, Rue Roger Salengro - 93700 Drancy

**யாழ் இறைச்சிக்கடை**
6, Rue Perdonnet - 75010 PARIS

**SACHI EDUCATION**
70, rue Philippe de Girard - 75018 PARIS

**NRS COIFFURE**
5B, Av. Alexis Varagne - 95 Villiers le Bel

**ராக ஜோதி மளிகை**
C.C Pte de la Ville - 95140 Garges Les Gonesse.

**மாயவர் - மொழிபெயர்ப்பு**
57, Rue Louis Blanc - 75010 Paris

**MGR VIDEO**
5, Rue Perdonnet - 75010 Paris

**SARL VARNISHA COIFFURE**
111, rue de l'Ouest - 75014 Paris

**தமிழாலயம்**
19, Rue Cail, 75010 Paris

**மாலா மளிகை**
4, Place de Salengro - Garges les Gonesse

**அறிவாலயம் புத்தகசாலை**
7, Rue Perdonnet (M°: La Chapelle)

**ஜீவனா சலூன்**
203, Rue de Fbg St.Denis (M°: La Chapelle).

**SHAEE CASH & CARRY**
193, Rue de Fbg St.Denis (M°: La Chapelle)

**RESTAURANT PARADISE**
10, Av. Louis Aragon, Bobigny (M°: Bobigny)

**ஞானமணி பல்பொருள் அங்காடி**
218, Rue. Anatole Francy - 93 Drancy

**அம்பாள் ஸ்ரோஸ்**
192, Rue du Fbg.St.Denis - 75010 PARIS

**தமிழ்ச்சோலை:தமிழ்ச்சங்கம்**
Le Blanc Mesnil

**FUN TELECOM**
139, Av.de St.Ouen - M°: Pte de St. Ouen)

**கிருஷ்ணா அச்சகம்**
73, Rue Doudeauville - 75018 Paris

**எவரெஸ்ற்**
14, Bis, rue Emile zola 93400 St.Ouen
M°: Pte de St. Ouen)

சுறுசுறுப்புடன் செயற்படுபவர்களுக்கு எல்லாக் கதவும் திறந்தே இருக்கும்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரியாமலே உள்நுழைந்து எமது உயிருக்கு உலை வைக்கக்கூடியவை. காற்றின் தரத்தை கண்காணிக்கும் அமைப்பான Airparif இன் எச்சரிக்கையைத் தொடர்ந்து முதற் கட்டமாக வீதிகளுக்கு அண்மையில் அமைந்துள்ள வெளியிடங்களில் உடற்பயிற்சி மற்றும், 'ஜாக்கிங்' செய்ய தடை விதிக்கப்பட்டது. 5 வயதுக்கு குறைவான சிறார்களுடன் வெளியில் செல்லுவது மற்றும் வீடுகளில் கட்டுமான வேலைகள் செய்வதற்கான தடைகளும் அறிவிக்கப்பட்டன.

தொடர்ந்து வாகன வேகக்கட்டுப்பாடு நடைமுறைப்படுத்தப்பட்டது. அத்துடன் வீதியெங்கும் வாகனங்கள் பொலிசாரால் நிறுத்தப்பட்டு பரிசோதனைக்குட்படுத்தப்பட்டன. வேகம், Antipollution, Contrôle technique ஆகியவை பரிசீலிக்கப்பட்டன. பாரிசில் மட்டும் பரிசீலிக்கப்பட்ட 10 ஆயிரம் வாகனங்களில் 3380 வாகனங்கள் அபராதத்திற்குள்ளாக்கப்பட்டன. வளிமண்டல நிலைமை தொடர்ந்து மோசமாகிக் கொண்டிருக்க சுற்றுச்சூழல் பாதுகாவலர்களின் அழுத்தத்தில் அரசு பொதுப் போக்குவரத்தை நான்கு நாட்களுக்கு முற்றிலுமாக இலவசமாக்கியது. பாரிஸ் மாநகர சபையும் தன்பங்கிற்கு Vélib மற்றும் மின்சாரத்தில் இயங்கும் Autolib வண்டிகளையும் இலவசமாக்கியது.

இந்த செயற்பாட்டிற்காக அரசு இழந்த தொகை 12 மில்லியன் யூரோக்கள். அறிவிக்கப்பட்ட இத்தனை இலவச சேவைகளும் மக்கள் தங்கள் வாகனங்களை விடுத்து பொதுப்போக்குவரத்தைப் பயன்படுத்துவதற்கே. இருப்பினும் வளிமண்டல நிலைமை கட்டுக்குள் அடங்காமல் போக இறுதியாக பாரிஸ் மற்றும் சுற்று வட்டாரத்தில் ஒற்றையெண், இரட்டையெண் இலக்கத்தகடு வாகனப் போக்குவரத்து முறை அமுல்படுத்தப்பட்டது. 17.03.2014 ல் ஒற்றை யெண், 18.03.2014 ல் இரட்டையெண்பதிவு இலக்கங்கள் கொண்ட வாகனங்கள் மட்டுமே பாரிசிற்குள் செல்ல அனுமதிக்கப்பட்டன. இது வாகன ஓட்டுனர்களையும் அவர்கள் நலன்சார் அமைப்புகளையும் கோபப்படுத்தியது. வாகனப் புகைகள் மட்டுமல்ல வீடுகளின் வெப்பமூட்டிகளும் காரணமாகும் போது, எமக்கு மட்டும் ஏன் இந்த பாரபட்சம் எனக் குமுறினர். இது தொடர்பாக கருத்து வெளியிட்ட சுற்றுச் சூழல் அமைச்சர் இச் செயற்பாட்டால் மக்களின் அன்றாட செயற்பாடுகள் பாதிக்கப்படுகின்றன. பொருளாதார ரீதியாகவும் இழப்புகள் ஏற்படுகின்றன. இருப்பினும் இப்பாரதூரமான வளிமண்டல மாசு நிலவரத்திற்கு எமக்கு வேறுவழிகளேதும் இல்லை. இச் செயற்பாடு பிரான்சிற்கு புதுமையானதுமல்ல. 1 ஐப்பசி 1997 லும் இச்செயற்பாடு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. வெவ்வேறு நாடுகளில் இத்தகைய வாகன போக்குவரத்து தொடர்ந்தும் அமுலில் உள்ளது எனவும் குறிப்பிட்டார்.



இப்போக்குவரத்து முறையால் கைமேல் பலன் கிட்டியது. பாரிசிலும் சுற்றுவட்டத்திலும் 15 முதல் 20வீதம் வரையான போக்குவரத்து நெரிசல் குறைவானது. அத்துடன் வாகனங்களால் வெளியாகும் நச்சுப் புகை வெளியேற்றமும் 20 சதவீதமாக குறைந்து நிலைமை கட்டுக்குள் வந்தது. தொடரவிருந்த இப் போக்குவரத்து முறை அரசால் கைவிடப்பட்டது.

தற்காலிகமாக நிலைமை ஓரளவு கட்டுக்குள் வந்தாலும் அச்சம் தணியவில்லை. சுற்றுச் சூழல் நலன்சார் அமைப்புகளும், ஆர்வலர்களும், அனைத்து மக்களையும் விழிப்புணர்வோடு செயற்படவும், அரசு சரி யான முடிவுகளெடுத்து சுற்றுச் சூழல் பாதுகாப்பில் கூடுதலான கவனம் எடுக்கவேண்டுமெனவும் தொடர் கோரிக்கைகள் விடுத்த வண்ணமுள்ளன. ●

## முன்னாள் அதிபர் நிக்கொலா சார்கோசியின் தொலைபேசி உரையாடல்கள் ஒட்டுக் கேட்கப்பட்டுள்ளன.

இச்செய்தி நடக்கவிருக்கும் நகர–சபைத் தேர்தலிலும் பார்க்க அதிகம் பேசப்படும் அரசியல் நிகழ்வாகியுள்ளது. ஒரு வருட காலம் (2011) அவரின் தொலைபேசி உரையாடல்கள் ஒட்டுக் கேட்கப்பட்டுள்ளன. அத்துடன் அவரின் உட்குழு விவாதங்களும் அனுமதியின்றி பதிவு செய்யப்பட்டுள்ளன. பதிவு–களை நிக்கொலா சார்க்கோசியின் முன்னாள் பிரத்தியேக ஆலோசகர் Patrick Buisson நிகழ்த்தியுள்ளார். இப் பதிவுகள் ஊடகங்களில் வெளியாக விடயம் சூடுபிடித்தது. நிக்கொலா சார்கோசி ஆட்சியிலிருந்து விலகிய பின் 2007 தேர்தல் செலவுகளுக்காக Bettencourt மற்றும் மறைந்த லிபிய அதிபர் மொகமட் கடாபியிடம் பணம் பெற்றிருந்தார் போன்ற வழக்குகள் உட்பட பல வெவ்வேறு வழக்குகளில் உள்ளிழுக்கப்பட்டிருந்தார். இவ் வழக்குகளின் நிமித்தம் நீதிமன்றத்தின் அறிவுறுத்தலின் படியே தொலைபேசி உரையாடல்கள் ஒட்டுக் கேட்கப்பட்டுள்ளன. விவாதங்கள் பதிவு செய்யப்பட்டமைக்கு அவை தொடர்பான அறிக்கை தயாரிக்கவே தான் பதிவு செய்ததாகவும் யாரோ திருட்டுத்தனமாக பதிவுகளை ஊடகங்களுக்கு கொடுத்து விட்டார்கள் எனவும் Patrick Buisson தெரிவித்துள்ளார். பெருங்கோபத்திற்குள்ளான சார்கோசி மற்றும் UMP கட்சியினர் ஆளும் கட்சியிடம் தொனியை உயர்த்தினார்கள். எப்படியான ஒரு நாட்டில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்? பிரான்சில் தனிமனித சுதந்திரம் இல்லாமல் போய்விட்டதா? என்று கேள்விகள் எழுப்பினார். அரசோ தங்களுக்கு இது தொடர்பாக எதுவும் தெரியாது எனக் கைவிரித்து விட்டது. இது எப்படிச் சாத்தியம் என்பது பெரும்பாலோனோரின் கேள்வியாக எழுந்தது. அரசும் அதிகாரமும் ஒரு போதும் நீதித்துறையின் முடிவுகளில் தலையிடுவதில்லை. அத்துடன் அவர்களின் செயற்பாடு தொடர்பாக நீதிமன்றம் அவர்களது துறை அமைச்சருக்கு சுற்றறிக்கைகள் எதுவும் அனுப்பவேண்டிய கட்டாயமில்லை என நீதித்துறை அமைச்சர் Christiane Taubira தெரிவித்துள்ளார்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org